உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

சம்பிரதாய தீபம்

திருக்கைலாய பரம்பரை
ஸ்ரீகண்ட சந்தான சாம்பிரதாய அவிச்சின்ன ஞானபீட மாகிய
தருமபுர வாதீனத்து

ஸ்ரீ சிவாநந்த முனிவர் அருளியது.

இஃது

ஷை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ,
சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள்
திரவியோபகார சகாயத்தால்

ஷை ஆதீனத்து அடியார் குழாத்து ளொருவராகிய
வித்துவான் ஸ்ரீமத் சட்டைநாதத்தம்பிரான் சுவாமிகள்
பரியாலோசனத்தில்

ஸ்ரீகாழி வித்துவான்,
ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளையவர்களால்

சீகாழி 'திரிபுரசுந்தரி' பிரஸில்
அச்சியற்றுவிக்கப்பெற்றது.

பிரதி ௫ா]　　முதற்பதிப்பு.　　[காபிரைட்.
1928

Printed at the
Thirupurasundari Press,
Shiyali.

உ

சிவமயம்.

சம்பிரதாய தீபம்.

முகவுரை.

சைவ சமய மெய்ச்சம யந்தனி
லுய்வகைச் சமய வுயர்நிலைத் தவரையு
மெய்ப்பில்சந் தானத் துய்ப்பவர் தமையு
மவர்வழிக் குழீஇய தவர்தமை யுஞ்சால்
பரம்பரை யவரையுஞ் சிவனெனப் பேணி
யாங்கவர் வழங்கிய பாங்கமை வழக்கம்
வழிவழி சிறப்பப் பழியிலா மரபி
னிலையிற் பிரியாக் கலையொடு சிவணி
நன்மைகைப் பிடித்து ஞான நெறியின்
றன்மை மாந்துதல் சான்றோர் கடனே,

ஆதலின், ஈண்டு

நற்பொருளாம் பரம்பாலி னந்தியரு ளூலும்
நல்வழியாம் மெய்கண்டான் சண்பையர்தம் நாதன்
அற்புதமா முமாபதிதா மிவருரைத்த நூலும்
ஆகமத்தி னுட்பொருளு மளவில்பர சமயப்
புற்புதமாம் நிலையில்பொரு ளனைத்தினையும் பார்த்துப்
பொருண்மைப்பா லறியாத மருண்மைப்பா லுடையேன்

ஸ்ரீகண்ட சந்தான சாம்பிரதாய அவிச்சின்ன பரம்பரையின்படி உண்மைநெறியை யறிதல்வேண்டுமென்னும் ஆதரவுடன் சுவடிகளைக் கருத்தூன்றிப் பார்த்தவளவில், பல அரிய நூல்களினிடையே சம்பிரதாய தீபமென்னும் இச் சீரிய நூல் கிடைக்கப்பெற்று, அதனைப் பிரதிசெய்து படனஞ்செய்து வருகையில், எனது நண்பர் பலர் விருப்பத்திற் கிணங்கிப் பிரசுரிக்கலாயினேன். என்மாட்டு யாதேனுந் தவறுளதேற் பெரியார்

திருக்கைலாய பரம்பரைத் தருமபுர வாதீனத்துப் பத்தாவது குருமூர்த்தியாக விளங்கிய சிவஞானதேசிகர் காலத்துக் (கி-பி. ௧௭௪௰) காசியம்பதி முத்திமண்டபத்தே யன்னார் திருமுன்னர், சிவாநந்தமுனிவர் என்பார் புறச்சமயத்தார் சைவசமயப் பொருட்குக் கூறுந் தடைகளை மறுத்துத் தமது பீடாதிபர் பரம்பரையின் வழங்கிவந்த சாம்பிரதாயக் கொள்கைகளை இந்நூலின்கண் தெளிவாக வரைகின்றார்.

இவ்வாதீன குரவர் திருமுடியடைவு:—

எண்.	சந்தான குரவர் பரம்பரைத் திருநாமம்.	பரிபூரண ஸ்தலம்.	மாதம்.	பக்ஷம்.	திதி.
௧	ஸ்ரீதக்ஷிணாமூர்த்திதேவர்	இவர்கள் கைலாய வாசிகள்			
௨	திருநந்திதேவர்				
௩	சனற்குமாரமுனிவர்				
௪	சத்தியஞானதரிசனிகள்				
௫	பரஞ்சோதிமுனிவர்				
௬	மெய்கண்டதேவர்	திருவெண்ணெய்நல்லூர்	ஐப்பசி	சுக்கில	பிரதமை
௭	அருணந்திசிவாசாரியார்	துறையூர்	புரட்டாசி	கிருஷ்ண	திரயோதசி
௮	மறைஞானசம்பந்தர்	திருக்களாஞ்சேரி	ஆவணி	சுக்கில	துதியை
௯	உமாபதிசிவாசாரியார்	கொற்றவன்குடி	சித்திரை	ஷை	துவாதசி
௰	அருணமச்சிவாயர்	ஷை	மார்கழி	ஷை	பௌர்ணிமை
௰௧	கங்கைமெய்கண்டார்	சீகாழி	கார்த்திகை	கிருஷ்ண	பஞ்சமி
௰௨	பழுதைகட்டிச்சிற்றம்பலவர்	மதுரை	பங்குனி	கிருஷ்ண	நவமி
௰௩	பழுதைகட்டிஞானப்பிரகாசர்	காளத்தி	ஐப்பசி	கிருஷ்ண	சதுர்த்தி
௰௪	ஞானப்பிரகாசர்	திருவாரூர்	ஷை	கிருஷ்ண	சஷ்டி

முன் சந்தானத் தொடர்ச்சி.

௰௫	ஞானஸம்பந்ததேசிகர்	தருமை	வைகாசி	கிருஷ்ண	சத்தமி
௰௬	ஆனந்தபரவசதேசிகர்	ஷை	மார்கழி	கிருஷ்ண	திருதியை
௰௭	சச்சிதானந்ததேசிகர்	ஷை	ஆனி	சுக்கில	சத்தமி
௰௮	மாசிலாமணிதேசிகர்	ஷை	புரட்டாசி	சுக்கில	ஏகாதசி
௰௯	ஞானஸம்பந்ததேசிகர்	ஷை	ஆவணி	சுக்கில	துதியை
௨௰	திருஞானஸம்பந்ததேசிகர்	திருக்குற்றாலம்	சித்திரை	கிருஷ்ண	பிரதமை
௨௧	திருவம்பலதேசிகர்	தருமை	ஐப்பசி	சுக்கில	பௌர்ணமி
௨௨	அழகியதிருச்சிற்றம்பலதேசிகர்	கோட்டூர்	கார்த்திகை	சுக்கில	ஏகாதசி
௨௩	திருநாவுக்கரசுதேசிகர்	தருமை	ஐப்பசி	சுக்கில	பௌர்ணமி
௨௪	சிவஞானதேசிகர்	ஷை	ஷை	கிருஷ்ண	தசமி
௨௫	சச்சிதானந்ததேசிகர்	ஷை	மார்கழி	சுக்கில	தசமி
௨௬	முத்துக்குமாரதேசிகர்	ஷை	சித்திரை	கிருஷ்ண	அஷ்டமி
௨௭	ஞானஸம்பந்ததேசிகர்	ஷை	ஆவணி	கிருஷ்ண	ஏகாதசி
௨௮	கந்தப்பதேசிகர்	ஷை	ஷை	கிருஷ்ண	நவமி
௨௯	மாசிலாமணிதேசிகர்	ஷை	தை	கிருஷ்ண	சஷ்டி
௩௰	சச்சிதானந்ததேசிகர்	சிவசைலம்	கார்த்திகை	சுக்கில	துவாதசி
௩௧	மாணிக்கவாசகதேசிகர்	திருபுவனம்	மாசி	கிருஷ்ண	சதுர்த்தி
௩௨	சிவஞானதேசிகர்	திருப்பனந்தாள்	கார்த்திகை	சுக்கில	பௌர்ணமி
௩௩	மாணிக்கவாசகதேசிகர்	தருமை	ஆனி	சுக்கில	சதுர்த்தி
௩௪	சிவஞானதேசிகர்	ஷை	ஆடி	கிருஷ்ண	சப்தமி
௩௫	சச்சிதானந்ததேசிகர்	ஷை	பங்குனி	கிருஷ்ண	பஞ்சமி
௩௬	மாணிக்கவாசகதேசிகர்	ஷை	ஐப்பசி	கிருஷ்ண	சதுர்த்தி

௩௭ சுப்பிரமணியதேசிகர் நீடூழி வாழ்க. புலவரை என்றும் புரக்க.

இந்நூல், வைதிக சைவ சுத்தாத்துவித சித்தாந்தத்தை எளிதின் விளக்குதலின், யாவர்க்கும் பயன்படத்தக்கது. இதற்கு உரையொன் றெழுதக் கருதினே னாயினும், விரிவஞ்சி யதனை விடுத்து, என் ஆற்றலுக் கியன்றவரை யதிகாரவடைவும் செய்யுளியையும் மாத்திரம் காட்டியுள்ளேன். விரிந்த அறிவுடை யார்க்கு நூற்பொருள் விரிந்து தோன்றும்.

தாரணியிற் செல்வருஞ் சான்றோருந் தந்தம் நிலைமை யிற் றளராது நின்று, உண்மை ஞானத்தை யுள்ளவாறு உணர்ந் துய்தற்பொருட்டு, உயரிய சாம்பிரதாய நூல்களைக் கற்றல் உத்தம வியல்பாதலின், அன்னாரது பயன் கருதி, இச் சித்தாந்த நூலை வெளியிடும் பணியின் என்னை நியமித்தருளிய தருமபுர வாதீனத்து மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக சுவாமிகளுக்கும், நடுவூருள் வேதிகை சுற்றுக்கோட் புக்க பழம் பொருந்திய தேமாவன்ன தங்கள் திருமாளிகைப் புத்தக நில யத்தில் இந்நூலுட் பெரும்பகுதியை யான் பிரதிசெய்து கொள்ள அநுமதி தந்த ஸ்ரீகாழி ஸ்ரீமான் ச. சதாசிவமுதலியா ரவர்களுக்கும் என் வந்தனங் கூறுகின்றேன். தொண்டை மண் டலத்துத் தூயோர் ஆகிய இவ்விருவரும் இங்ஙனம் அருளுடைய ராவர்.

சிறந்த நுகர்ந்தொழுகுஞ் செல்வ முடையார்
அறஞ்செய் தருளுடைய ராதல்—பிறங்கல்
அமையொடு வேய்கலாம் வெற்ப அதுவே
சுமையொடு மேல்வைப்பா மாறு.

பழமொழி ௨௧௫.

‘ உலகு யிர்க்கெலாம் பசுபதி யொருமுத லாயி, னலகில் சீருடையவன்மொழி மறையெனி லதன்க, ணிலக றம்பல வற்றி னும் ’ இதற்கிணையிலதேல், இவ் வுயரிய சம்பிரதாயத்தின்கட் சிவபெருமான் எம்மை நடத்தித் தமது இன்னருளைப் பாலிப்பா ராக. யாவர்க்கும் சிவம் உண்டாகுக. வேதநெறி தழைத்தோங்க, மிகு சைவத்துறை விளங்க, பூதபரம்பரை பொலிக.

தேற்ற முடையார் சிவமுறுவர் மெய்ஞ்ஞானத்
தேற்ற முடையா ரிவர்.

ஸ்ரீகாழி,
பிரபவஹூ
கார்த்திகைமீ
௧௨௳.

ப. அ. முத்துத்தாண்டவராயன்.

சம்பிரதாய வெண்பா.

சூசிபத்திரம்.

காப்பு ௧-௩

௧. குருமரபு சம்பிரதாயம்.

௧. குருவணக்கம் ௪-௯
௨. நூற்சிறப்பு ௧௰
௩. அவையடக்கம் ௧௧-௧௪
௪. ஞானசம்பந்த விபவம் ௧௫-௪௫
௫. முப்பொருளளவை ௪௬-௮௫
௬. ஞானதீட்சை விளக்கம் ௮௬-௱

௨. சாத்திர சம்பிரதாயம்.

௧. பரம் பொருள் ௱௧-௱௧௩
௨. பதிப் பொருள் ௱௧௪-௱௨௩
௩. ஐந்தொழில் விளக்கம் ௱௨௪-௱௩௭
௪. ஐந்துமலம் ௱௩௮-௱௫௧
௫. பரமுத்தி ௱௫௨-௱௬௧
௬. சார்பு மவாவு மற்று நிற்றல் ... ௱௬௨-௱௭௰
௭. மெய்யுணர்தல் ௱௭௧-௱௮௨

௩. குருபீட சம்பிரதாயம்.

௧. தருமபுரவாதீனம் ௱௮௩-௱௮௫
௨. வாழ்த்து. ௱௮௬

ஆகத் திருவெண்பா ௱௮௬

இதுவரை கிடைத்தவை. மேலுள்ளவை கிடைப்பிற் பின்னர் வெளிவரும்.

உ

சிவமயம்.

மகாஸன்னிதான ஸ்துதி.

மாயை கழன்றிடுமால் மன்னுவினை தீர்ந்திடுமால்
நோயை விளைக்குமலம் நோலாது—நேயை
புரமணியர் சேயரலர் போற்றுதரு மைச்சுப்
பிரமணியர் பாதம் பெரிது.

வாகை—பொருளொடு புகறல்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சம்பிரதாய தீபம்.

காப்பு.

ஓங்குமா னந்தவனத் தோரொளியா மெய்யானைக்
காங்கே திருவிளையாட் டைந்தொழில்க— ளோங்கார
நாத முழக்குயிர்ப்பு ஞானாதி மும்மதமென்
போதங் கவளப் பொசிப்பு. (க)

விசுவேசராதியர் வணக்கம்.

விசுவபதி சத்தியுமை மெய்க்கங்கை மைந்த
ரசபையிடத் தோங்காரத் தானை—நிசமுருக
னெண்ணி லடியா ரிவர்வடிவ மெல்லாமென்
கண்ணிரண்டாய்க் காணாது காண். (உ)

நடராஜர் துதி.

அரவாகு மாயைபிடித் தார்த்தவினை சுட்டே
விரவுமலந் தாழ மிதித்துத்—திரோதான
மோதியுயி ரைத்தூக்கி முத்திரையான் முத்திதரு
நாதனா னந்தநட னம். (ங)

க. குருமரபு சம்பிரதாயம்.

க. குருவணக்கம்.

கல்லா னிழல்வாழ் கயிலாய நாதபதி
சல்லாப நந்தி சனற்குமர—னல்லார்கள்
சேர்சத்ய ஞான தெரிசி பரஞ்சோதி
பேர்வெண்ணை மெய்கண்டான் பின். (௪)

துறையூ ரருணந்தி தூய கடந்தை
மறைஞான சம்பந்த மைந்த—னிறைபுலியூர்க்
கொற்றங் குடிவாழுங் கோமா னுமாபதிபின்
பெற்றமச்சுச் செட்டியார் பின். (௫)

கழுமலத்தில் வந்தருள்சேர் கங்கைமெய் கண்டான்
பழுதைகட்டிச் சிற்றம் பலவன்—பழுதைகட்டி
ஞானப்ர காசனரு ணற்கமலை மாநகர்வாழ்
ஞானப்ர காசனரு ணடு. (௬)

ஞானசம் பந்தனு னந்த பரவசன்பின்
ஞானவனு கின்றசச்சி தானந்த—னானமற்
றோர்மாசி லாமணிபின் றோர்ஞான சம்பந்தன்
சார்திரு ஞானசம்பந் தன். (௭)

எங்குஞ் சிவமா யிலகுதிரு வம்பலவன்
றங்கு மழகியசிற் றம்பலவன்—கங்குல்
பகலற்ற காட்சி பதிப்போன் றருமை
யகல்கிலா நாவுக் கரசு. (௮)

என்னுங் குரவ ரிடைவிடா தேயருள்செய்
மன்னுசித் தாந்த வழக்கருளி—யென்னையாள்
சீரார் சிவஞான தேசிகசம் பந்தன்றா
ளார்வமுடன் வைப்பே னகத்து. (௯)

உ. நூற்சிறப்பு.

சம்பு சிவஞான சாத்திரபா ரம்பரையிற்
சம்பிரதா யங்களொன்றுந் தப்பாமற்—சம்பந்தன்
சொன்னபொரு ளாதலினாற் றெண்டாரறி யிந்நூற்பேர்
பன்னுசம்ப்ர தாயதீ பம். (௰)

௩. அவையடக்கம்.

ஆதார சத்திமுத லண்டமனந் தங்கோடி
நாதவரை யாதனமு நன்மூலஞ்—சோதிசிவ
மென்றுநின்ற மெய்யடியா ரெண்ணிலிங்க மூர்த்திகளுக்
கின்றெனுள மேதிருக்கோ யில். (௧௧)

புன்மைமெவகு வானாலும் பொல்லாதென் றோர்நல்லார்
நன்மைமெவகு வானாலு ஞானமிலார்--வன்மை
யினாற்சொல்வ தேதமியல்பாத லாலே
யெனாற்றிருத்தக் கூடுமோ வின்று. (௧௨)

அடியேன்புன் சொல்லா மழுக்குத் துணியின்
முடியு முடியாத மூன்று—நெடிய
பொருளைக்கைக் கொள்வார் பொதிந்ததுதீ தென்று
ரொருமணிகைக் கொள்வா ருவந்து. (௧௩)

அன்ப ரிருணீங்கி யானந்த மெய்யருந்தத்
தென்சம் பிரதாய தீபத்தை—யன்பாய்த்
தவாநந்தர் போற்றச்செய் தான்றருமைக் காசிச்
சிவாநந்த ஞந்தே சிகன். (௧௪)

குருமரபு விளக்கம் இத்துணையும். முதல் நூறு செய்யுளும் பத்துச் சம்பிரதாயங்கள் குருமரபைப் பற்றியவை. ௱௧—௱அ௬ வரை அ௬ சம்பிரதாயங்கள் சாத்திரத்தையும் குருபீடத்தையும் பற்றியன, ஆகச் சம்பிரதாயம் ௯௬.

௪. ஞானசம்பந்த விபவம்.

இஃது ஞானப்பிரகாசருக்கும் ஞானசம்பந்தருக்கும் உள்ள அந்தரங்க உரிமையை முற்பட்டோர்மே லேற்றிக் கூறுகின்ற மையின் விபவ மாயிற்று. இவ்விபவத்தை ஞானசம்பந்தசுவாமி இந்நூலாசிரியர்க்கு இச்சமயத்துச் சிவபோகசாரத்தின் அதிகார மாகவே உண்ணின்றுணர்த்தினர் என்பதோர் கொள்கையுளது.

அருவு முருவு மருவுருவு மல்லா
வொருவ னுயிர்க்குயிரா யோங்கித்—திருவார்
கமலைவரு ஞானப்ர காசனென வந்தே
யமலபதந் தந்தெனையாண் டான். (௧௫)

ஆரறிவார் நீதிவழி யாரறிவார் சித்திமுத்தி
யாரறிவார் நற்றவங்க ளென்பனைத்தும்—பாரெவர்க்குங்
கர்த்தன் கமலையில்வாழ் ஞானப்ர காசனெனு
மத்தனென்போல் வந்திலனா னால். (௧௬)

அரியயற்கு முன்னா ளடிமுடியுங் காணாப்
பெரியவனே வந்து பிறந்து—துரியம்
பெருக்கின்றான் ஞானப் பிரகாச னாகி
யிருக்கின்றா னாரூரி லின்று. (௧௭)

பெருக்கினான் என்றும் பாடம்.

கண்டேனிப் பாசங் கழிந்தே னமுதைமுகந்
துண்டேன் சுகானந்தத் துள்ளிருந்தேன்—வண்டிமிர்காத்
தேனைப் பொழிகமலைச் செங்கமலப் பொற்பாத
ஞானப்ர காசனையே நான். (௧௮)

உள்ளிருந்தே யென்று முணர்த்துகினுங் கண்டிலரென்
றுள்ளும் புறம்புமா வோமென்று—மெள்ள
நரருருவா யாரூரில் வந்தான் நமையாண்
டருள்புரிஞா னப்பிரகா சன். (௧௯)

இருளுதய நீக்கு மிரவியைப்போ லென்னு
ளருளுதய நன்றா யருளி—மருளுதய
மாற்றியவ னாரூரன் மாமறையு மாகமமுஞ்
சாற்றியஞா னப்பிரகா சன். (௨௰)

ஒழியாத பேரின்பத் துள்ளா யுலகில்
விழியா திருந்து விடவே—யழியாத
பூரணா செங்கமலப் பொற்பாதா தென்கமலை
யாரணா நாயேற் கருள். (௨௧)

தேடுந் திரவியமுஞ் சிற்றறிவும் பற்றுதலுங்
கூடும்பொய் யென்றருளிற் கூட்டினா—னாடரிய
ஞானப்ர காசனுயர் நற்கமலை மாநகர்வாழ்
வானப் பிறையணிந்த மன். (௨௨)

காயங் கரணமுதல் நான்கினுக்குங் காரணந்தா
னையவிருள் மாயை யதுவென்றாற்—றூயபொருட்
போதனே செங்கமலப் பொற்பாத னேயெனைநீ
யேதென்று சொல்லா யினி. (௨௩)

செங்கமலப் பொற்பாதன் சீர்பாத வல்லபங்க
ணங்கமலை வாழ்கிளியே நாடிக்கேள்—சங்கையிலாத்
தத்துவத்தைக் காட்டியதிற் றத்துவத்தைக் காட்டியருட்
டத்துவத்தைக் காட்டியது தான். (௨௪)

தேசு செறிகமலைச் செங்கமலப் பொற்பாதன்
பேசுதமிழ் ஞானப் பிரகாசன்—பாசவினை
வாட்டினான் மீட்டுநான் வாரா வகையருளைக்
காட்டினான் கூட்டினான் காண். (௨௫)

அகத்தை யிழந்தருளா யவ்விடத்தே தோன்றுஞ்
சுகத்தி லழுந்திவிடச் சொன்னான்—மகத்தான
சிற்பரனா ரூர்தனில்வாழ் செங்கமலப் பொற்பாத
தற்பரஞா னப்பிரகா சன். (௨௬)

ஈச னடியி லிருக்கையிலே யெங்கெங்கு
மீசனடி தேடி யிளைத்தேனே—பேசரிய
பொற்பதத்தன் செங்கமலப் பொற்பாதன் றன்னுடைய
நற்பதத்தைக் காணுமுன் நான். (௨௭)

நற்பதஞ்சே ராரூரின் ஞானப்ர காசனெந்தை
தற்பரனார் ஞானவாட் டந்தானே—சொற்பனத்துங்
காரார் மறலியயன் கண்ணனுக்கு மஞ்சேனை
யாராலு மென்னசெய்ய லாம். (௨௮)

வெறும்பாழ்ற் பேரின்ப வெட்டவெளி தன்னிற்
குறும்பாளர் காணுக் குடிலி—னுறும்பாச
மோட்டியெனை வைத்தனனே யுற்றபிர பஞ்சமெலா
மாட்டியஞா னப்பிரகா சன். (௨௯)

என்றுஞ் சிவத்தோ டிணைபிரியா தேயறிவாய்
நின்றபடி தன்னை நிகழ்த்தினான்—மன்றின்
நடமாடு மாரூரன் ஞானப்ர காசன்
றிடமாக வென்னுள்ளத் தில். (௩௦)

நாதனார் தென்கமலை நாயனா ரென்னுயிர்க்கும்
போதனார் செங்கமலப் பொற்பாதர்—பேதமற
வொன்றிரண்டு தானறவே யுண்மையிலே கூட்டியெனை
யின்றறவே வைத்துவிட்டா ரே. (௩௧)

நன்கருத்தே தென்கமலை ஞானப்ர காசனே
யென்கருத்தே யுன்கருத்தென் றெண்ணுமே—னுன்கருத்தை
யென்கருத்தென் றெண்ணியே யான்பட்ட துன்பமெலா
முன்கருத்தே தீரவறி யும். (௩௨)

பொல்லாத தீவினையிற் போகார்கள் போனலு
மெல்லாஞ் சிவன்செயலே யென்றிருப்பர்—நல்லார்க
ணத்துங் கமலையில்வாழ் ஞானப்ர காசனருள்
சற்றும் பிரியா தவர். (௩௩)

அலையா மறிவை யலையாத வாறு
நிலையா வருளி னிறுத்தித்—தொலையாமற்
பூண்டவஞ்ஞா னத்தைமெலாம் போக்கியெனை நன்றாக
வாண்டவன்ஞா னப்பிரகா சன். (௩௪)

மாதா வுதரத்து வந்துதியா வண்ணமெனை
நாதாந்தத் தப்புறத்தே நாட்டினன்—வேதாவு
நாரணனு நாடரிய நற்பதத்தன் றென்கமலை
யாரணன்ஞா னப்பிரகா சன். (௩௫)

கமலையின்வாழ் ஞானப்ர காசனுக்கா ளானோ
மமல னருளி லடைந்தோ—நமலம்போ
யங்கெழுந்தோ மானந்த சாகரத்தி லாடினோ
மெங்கெழுந்தென் ஞாயி றெமக்கு. (௩௬)

அருளேதி யானே தறிவேது மாயை
மருளேது கன்மமல மேது—பொருளேது
நற்பரனே தென்கமலை ஞானப்ர காசனே
தற்பரனே தேசிகனே சாற்று. (௩௭)

ஏதமில்லா வாரூர்க் கிறைவ னெனதுளத்தில்
பேதமில்லா ஞானப் பிரகாசன்—பாதமலர்
பூணாத மெய்த்தலையும் பொய்த்தலையே பொன்மேனி
காணாத கண்ணுமரக் கண். (௩௮)

நங்கமலை வாழ்கின்ற ஞானப்ர காசனே
செங்கமலப் பொற்பாத தேசிகா—வெங்கு
முனக்குள்ளே யானிருக்க வோடிவந்தே நானு
மெனக்குள்ளே நீயிருந்தா யே. (௩௯)

பெருவேத ஞானப் பிரகாச செங்கைத்
தருவே யடியார் தவமே—குருவே
யுனையறிய மாட்டார்க ளுள்ளபடி யெங்குந்
தனையறிய மாட்டா தவர். (௪0)

சிவத்தி லிருக்கச் சிவந்தேடி யெங்கு
மவத்திற் றிரிந்துழல்வா ரந்தோ—தவத்திலினி
தாரூரன் ஞானப் பிரகாச னனந்தப்
பேரூரில் வாழாத பேர். (௪௧)

நம்பனே தென்கமலை ஞானப்ர காசனே
யும்பரயன் மாலறியா வுத்தமனே—நம்பினர்க்கு
மெய்யனே நாயேன் வினையை விழவுதைத்த
வையனே யென்னுண்ட வன். (௪௨)

நற்றவனே யாரூர்வாழ் நாலேழ் சகலகலை
கற்றவனே ஞானப்ர காசனே—யுற்றெனை
மன்னென்று யிவ்வெள்ள மாகடலின் மன்னுமை
யென்னென்று கேட்டே னியான். (௪௩)

கற்பார்கல் லாநிற்பார் கற்றாரிற் செந்தமிழ்நூற்
பொற்பாயுஞ் செங்கமலப் பொற்பாதன்—சொற்பாரி
னல்லார் புகழ்கமலை ஞானப்ர காசனைப்போ
லெல்லாம்வல் லார்தமைக்கா ணேம். (௪௪)

இங்குவரச் சற்றுமினி யெண்ணுதோ வாரூர்வாழ்
கங்கைபுனை ஞானப்ர காசனே—சங்கரனே
முன்னு வலர்க்கிரங்கி மூதிருளிற் சென்றபத
மென்னு வலுக்கிரங்கி யே. (௪௫)

௫. முப்பொருளளவை.

சம்பந்த நாதனே சாற்றுமொரு விண்ணப்ப
மம்புவிமெய் கண்டா னருள்புதல்வன்—சம்பந்த
னப்பனரு ணந்திசித்தி யாரளவை யின்பொருளை
முப்பொருண்மேல் வைத்து மொழி. (௪௬)

மைந்தகேள் மெய்கண்டான் மைந்தன்மைந் தன்மைந்தன்
றந்தசிவ ஞானபோ தஞ்சித்தி—புந்தி
பரித்த பதிபசு பாசப் பனுவ
லருட்பயனு லாதியுண்மை யாங்கு. (௪௭)

சிவதருமோத்தர நூலாசிரியராகிய மறைஞான பண்டாரஞ் செய்த பதிபசுபாசப் பனுவல் வேறு, இங்குக்காட்டியது வேறு.

பார்மே லளக்கப் படுவ தளவையா
மோர்கொள் முகத்த லெடுத்தலுட—ளோர்பொருளை
யெண்ணுத னீட்ட லிவைநான்கா முப்பொருட்கு
நண்ணுமள வைசொல்வோம் நாம். (௪௯)

பிரமாதா ஞாதுருவாம் பேசுமுயிர் சத்தி
மருவருளும் ஞானம்ப்ர மாணம்—பிரமேய
மேகமனை ஞேய மிவையொன்று மானந்த
போகம் பிரமிதியாம் போற்று. (௪௬)

பேசுபிர மாதா பிரமாண மூன்றாகு
மேசில்பிர மேய மிருவிதமா—மாசில்
பிரமிதியொன் றேஞானம் பேணுதாட் டாந்தங்
குருவருளா னீயறிந்து கொள். (௫0)

பிரமாண மூன்றையுங்கேள் பேசவருங் காண்டல்
கருதலுரை யென்றறிஞர் காண்பர்—பிரமேயந்
தன்னியல் பென்றுந் தகும்பொதுவென் றோரிரண்டா
முன்னிவிரிப் போமேநீ யோர். (௫க)

குருவை மனிதனோ கூறுசிவ னோவென்
றிருமையாய்க் காண்டலைய மென்பர்—குருவை
மனிதனென் றுள் ளேதான் மதித்தல் திரிவாஞ்
செனியாமே நீயுந் தெளி. (௫௨)

சவிகற்பக் காட்சி சடத்தையைந்தோ டேயறிந்து
பொய்வகையாம் பாசத்தைப் போக்கலா—மவ்வுயிரா
ஞாதுருஞா னத்தாலே நாடிஞே யங்காண்ட
லோது நிருவிகற்ப முன். (௫௩)

அபாவமோ ரைந்தா யதனுள் ளபாவ
சுபாவங்கண் காட்சியிலே துன்னும்—விபுமைந்தா
இல்லா வபாவ மெழிலனுமா னத்தடங்கு
நல்லோர்கள் சொல்வரிது நாடு. (௫௪)

பொருளருத்தா பத்தி புகழொப் புவமை
தெருளொழிபே நற்பாரி சேடம்—வருமுண்மை
சம்பவ நல்லியல்பு சாருஞ் சுபாவலிங்க
நம்புமைந்து மெய்யனுமா னம். (௫௫)

ஐதிக மென்றுமரு ளாகமத்தி லேயடங்கு
மெய்தவரு நையா யிகன்பாட்டன்—மெய்திகழு
நீண்ட பவுரா ணிகர்வேறென் பார்சைவ
ராண்டளவை மூன்றென்பா ராய்ந்து. (ருசு)

உதகமெடுக் கப்போனு னேட்டைக் குடத்தி
லதிலேயெனி லுள்ள வபாவ—மிதுகாட்சி
யில்லிக் குடத்தானே யென்றுனீ ராடுகென்ற
லில்லபா வப்மானத் தெண். (ருஎ)

இலேத்தேக ஞானிக்கென் றுள்ள வபாவ
மலேப்பிலாக் காட்சியிலே மன்னு—மலேப்பிற்
சுபாவசித்தி யில்லையண்டத் தோற்றமென்ற லில்லா
வபாவமனு மான மறி. (ருஅ)

கங்கா நதியிலே காணுமிடைச் சேரியென்றூற்
கங்கையிலே யாயரில்லங் காட்டுவரோ—கங்கைக்
கரையிலிடைச் சேரியென்றல் காணருத்தா பத்தி
விரவுமனு மானம் விளம்பு. (ருகூ)

ஆன்மாவை யாக்கி யளித்தழிப்ப னீசனென்று
லான்மாவுண் டாகி யழிவனே—ஆன்மாவின்
காயமுண் டாகிநின்றே காண வழியுமென்றே
யாய்தலருத் தாபத்தி யாம். (சுo)

ஒப்புவமா னந்தா னொருசார் மரையறியா
னிப்புவிமே லாவைப்போ லென்றுகேட்—டப்படியோ
வென்றுவனத் தோடி யெழின்மரையைக் காண்பதுவா
மொன்றனுமா னத்தடங்கு மோர். (சுக)

சூரியனைப் போலச் சொரூபசிவ னென்றக்கா
லோர்கொளுப மானமா மீரிரண்டு—நேர்கொளலா
மீங்கிதுபோல் முப்பொருட்கு மேதுவமை வந்திடினு
மாங்கங்கே நான்கென் றறி. (சுஉ)

பாரிசே டந்தான்சம் பந்தகுரு வாதிலே
காரமணர் புத்தர் கழுமலரை—யூரறிய
வென்றதில்லை யென்றக்கால் மெய்ஞ்ஞான சம்பந்தர்
வென்றதுதா னிச்சயமா மே. (சுஙு)

புத்தர் கருதிருவர் என்றும் பாடம்.

பதிபசுபா சத்திற்ப்ர பஞ்சவனு போகம்
பதிபாசத் துக்கில்லைப் பார்த்தே—விதியென்னி
லான்மாவுக் கேயா மதுபாரி சேடமா
மேன்பார்ப்பார்க் கில்லை யிது. (௬௪)

உண்மையே சம்பவமா மோர்நூறு பொன்னிலே
யெண்பதுபொன் னுண்மையா மெப்போதுந்—திண்புவிமே
லோர்பொருளைச் சொல்லிலதற் குள்ளதுதா னுண்மையே
சேரனுமா னத்தடங்குஞ் செப்பு. (௬௫)

ஆயிரப் பொற்கிழிக்கு ளைஞ்ஞூறு பொன்வியாத்தி
நேயநிட்டை கூடு நிருமலர்க்குட்—டூய
பொதுஞானக் காட்சி புகழும் வியாத்தி
இதுசம் பவமுண்மை யெண். (௬௬)

இயல்பு சுபாவலிங்க மெட்டுப்பேர் கூடித்
துயிலு மிடத்தயுத சொன்னம்—பயமுறவே
காணா விடிலெழுவர் கள்வரல ரென்றொருவ
னாணவரை தல்லனுமா னம். (௬௭)

துக்கசுக போகந்தான் சொல்சித்துக் கென்னும்பே
ரக்கணமே நல்லோ ரமலமா—மிக்கபதிக்
கில்லையென் றேவரைந்தே யிங்கியம்ப ருனியல்பா
நல்ல சுபாவலிங்க நாடு. (௬௮)

ஐதிகங் கன்னபா ரம்பரிய மாகுமே
பைதிரமோ ராலிற் பசாசுண்டென்—றுய்வோர்க்குக்
கேட்டபடி சொல்லல் கிளர்காட்சி மானமல்ல
நாட்டாக மத்தடங்கு நாடு. (௬௯)

மைந்தன்கா ணானென்று மண்மே லருட்குருவாற்
பைந்தண் கயிலைப் பரம்பரைகேட்—டுந்தியே
வன்னாச் சிரம மறந்துபதே சங்கேட்டல்
கன்னபா ரம்பரியங் காண். (௭௰)

அபாவமுத லேழு மரும்பத மாதல்
சுபாவந் திருட்டாந்தஞ் சொல்லில்—விபுவாகு
முப்பொருட்குஞ் சொன்னோமேல் முன்போற்சொன் னால்விரியு
முப்பொருட்குஞ் சொல்வோ முயன்று. (௭௧)

அன்னியமாஞ் சாதியீ தாகுந்தன் சாதியீ
தென்று விலக்கணந்தா னேகபதி—தன்னியல்பு
சச்சிதா னந்தந் தரும்பொதுஞா னக்கிரியை
இச்சா சொரூபனென்றே யெண். (எஉ)

அன்னியமாம் பாச மரனுந்தன் சாதியின்றித்
தன்னியல்பிங் கான்மாச் சதசத்தா—மன்னியம்போய்
நித்தியவி யாபகச்சித் தென்றக்கா னோர்பொதுவா
முத்தமனே நன்று யுணர். (எங)

நித்யசடம் பாச நிகழும் பொதுவாகும்
வைத்தமலத் துக்கு மறைப்பிருளும்—பொய்த்த
மயக்க வறிவாகு மாயைகன்மங் கட்கிங்
கியக்குவிகா ரந்தன் னியல்பு. (எச)

சம்பந்தங் கேளாய் தரும்பதிக்குஞ் சத்திக்குஞ்
சம்பந்த மேக சமவாய—நம்புயிர்க்கு
மாது பதிக்கு மனன்னியதா தாத்மிகமா
மோதுவோ மேற்கே ளுவந்து. (எரு)

அனாதி யுயிர்க்கு மனாதிமலத் திற்கு
மனாதிசை யோகமே யாகும்—வினைமாயை
யொத்தவுல குக்கு முயிர்க்குஞ்சம் பந்தஞ்சை
யுக்தசம வாய முணர். (எசா)

அரனுக்குச் சத்தி யதற்கான்மா வாவிக்
கிருளுக்குச் சுத்த மிதற்குப்—பெரிய
மயல்சுத்த மாயையந்த மாயைக்குக் கன்மம்
வியாபகவி யாப்பியமா மே. (எஎ)

கலப்பா னினைந்தாற் கருணையா னந்த
முலைப்பால் வெளிப்படுமே முத்தர்—நிலத்தந்தை
தாய்கலப்பா லுண்டாந் தடுமாற்றந் தீரவே
நீகலப்பா லேகமாய் நில். (எஅ)

அரன்குண மெல்லா மறிதலாகுந் திருப்தி
விரவலுப்த சக்தி விசுத்த—நிராமயத்தோ
டன்றே சுதந்தர மனாதியா மெய்ப்போத
மென்று மனந்தசக்தி யெட்டு. (எகூ)

இச்சை யறிவியற்ற லின்பதுன்பந் தன்னுள்ளே
மெச்சு விருப்பு வெறுப்புடனே—நச்சா
மயக்க மியங்கா மலவுடலைத் தானென்
றியக்கு முயிர்ச்செயலிங் கெட்டு. (அ0)

விகற்பஞ்சங் கற்பம் வெகுளிமா மோக
மகற்றுங் கொலையு மருளுஞ்—சகத்தில்
மதமு நகையும் வருமா ணவமா
மிதமில் மலகுணமிங் கெட்டு. (அக)

அஞ்ஞானம் பொய்யோ டயர்வுபொரு ளின்மோகம்
பொய்ஞாலத் தைப்பேய்த்தேர் போலிருத்த—லெஞ்ஞான்றும்
மாச்சரிய மும்பயமு மாயா மலத்துக்கு
வாச்சகுண மேழெனும்நூல் வந்து. (அஉ)

கிடத்த லிருத்தல் கிளைவினைகள் செய்தல்
விடுத்தல் பரநிந்தை மேவல்—அடுத்த
கருமத்துக் காறுகுணங் காண்மும் மலமும்
பரவுமுனக் கன்னியமாம் பார். (அங)

பதிபசுபா சங்களுக்குப் பார்தன் னியல்பும்
பொதுவா மியல்பும் புகன்றோம்—விதமிவைகட்
கவ்வியாத்தி யோடதிவ் யாத்தி யசம்பவம்விட்
டெவ்வமில் லாதே யியம்பு. (அச)

பிரமாணத்தொகை இத்துணையும்.

முக்காட்சி.

இந்திரியக் காட்சி யிலங்குபூ தப்பழிப்போ
டைந்து பொறியு மறவுணர்தல்—அந்தக்
காணசுத்தி மானதமாங் காட்சி கலாதி
தரலொழிவு தன்வே தனை. (அரு)

முக்காட்சியுள் இதன் பின் கசு வெண்பாக்கள் சிதைந்துள்ளன. விஷயம் முத்திநிலை முப்பதவதாரத்துக் காண்க.

அளவை வகை.

1—81 எண்ணிட்டவை தருமபுரவாதீனப் பிரதியின் மாத்திரம் கண்டவை. இச்செய்யுள்களால் முப்பொருளளவையின் எஞ்சிநின்றனவற்றை விளக்கி, சாத்திர சம்பிரதாயத்தில் மெய்யுணர்தல் ஈறாக விவரிக்கப்பட்டவைகளை அளவைவாயிலாக வலியுறுத்துக் கூறுகின்றார்.

முப்பொருளளவையிற் பிரமேயம் உவமை யாதிக்கெட்டாத வாறும், பிரமாணம் பிரமேயம் பிரமாதா பிரமிதி வெவ்வேறா மாறும் உவமானத்தால் விளக்குகின்றார்.

காட்டுமுகப் பொல்லாப்புக் கண்ணாடி தன்னைநொந்தே
யோட்டையென வேயுடைத்தா லொப்புவரோ—நாட்டகத்தா
னீசெய் வினைக்கீடாய் நின்மலனால் மெய்தோன்று
மீசனைநோ காதே யிரு. (1)

தற்பரன் ஞாயிறொளி சத்திகண்க ளேபசுக்கள்
தற்பணமா மாயையுருத் தத்துவங்கள்—நற்பகுதி
யெண்ணுமை யாணவமா மின்பவிகா ரங்கன்மங்
கண்ணாடி யுள்ளொளியைக் காண். (2)

கடனீர் சிவமதற்குட் கன்மமுதற் றோற்றஞ்
சடமாயை யாம்பொய்ச் சகச—நெடும்பவந்தா
னீரைக்காட் டாமைவினை நீயதுவாய் நிற்றலாம்
பார்வையுயிர் பொய்யுமெய்யும் பார். (3)

குருடாங்கை சித்ரக் குறியை யுறாதே
தருசுவ ரொன்றைத் தடவும்—பெரியோர்
சிவமொன்றே காண்பர் செகத்தோற்றங் காணார்
பவமறநீ யுஞ்சிவனைப் பார். (4)

உடல்குனிந்து முக்கிக்கை யூன்றிமுழந் தாளிற்
றடநெடுங் கோபுரத்தைத் தாங்குஞ்—சடமாகும்
பாவைக்கா தாரம்பார் பஞ்சகர்த்யந் தானென்னு
மாவிக்கா தார மருள். (5)

பேரொளியாஞ் சூரியனும் பேருலகிற் சேர்பொருளுங்
கார்நிறக்கூ கைக்கிருளாக் காணுமே—பூரணமா
மேக னருளொளியு மின்பவா னந்தமுமெய்ப்
பாகமுமில் லார்க்கிருளாம் பார். (6)

பூனை விழிக்கிலப் பூதவிருள் பேரொளியா
மானதே காதிப்ர வஞ்சமெல்லா—ஞானிகண்ணுக்
கேகனரு ளானந்த வின்பவொளி யாய்நிற்கும்
பாகமுடை னீயறிந்து பார். (7)

எங்குஞ் சிவாதனமா மெங்குஞ் சிவமூர்த்தி
யெங்குஞ் சிவமூல மென்றறிந்தே—எங்கு
மறைப்பிருளு நீங்க வளரஞ் செழுத்தாற்
றுறப்பரிய மெய்விளக்கைத் தூண்டு. (8)

எங்குஞ் சிதம்பரமே யெங்குங் கனகசபை
யெங்குஞ் சிவன்கூத் தெழுத்தைஞ்சே—யெங்குஞ்
சிவகாமித் தாயெங்குஞ் சேவிப்போ ரெங்கு
மவமகல மைந்த வறி. (9)

அளவைக்குத் தாம் பிரமாணமாகக்கொண்ட நூல் இவை என்கின்றார்.

வந்தவனு மானவுப மான வளவைக்கிங்
கெந்தநூன் முன்னூ லியம்புவாய்—மைந்தா
சிவநெறிப்ர காசஞ் சிவப்பிர காசந்
தவர்புகழ்ஞா னமிருதந் தாம். (10)

தத்துவப்ர காசஞ் சதரேற்றின் சங்கிரக
முத்தர்பாற் கேள்வி முறைத்திரட்டுச்—சித்திமுதற்
பன்னூலி னுண்மை பகர்ந்தான் குருவவைக
ளிந்நூலிற் சொன்னே மெடுத்து. (11)

சதுர்வேத—என்பதும் பாடம்.

உவமானம் இத்துணையும்.

முப்பொருளளவை—அனுமானத்திற் பிரமாணத்திரயம்.

காட்சியனு மானங் கருத லனுமான
மாட்சி யுரையி லனுமான—மாட்சியா
மூன்றுமுரைத் தய்யனே முப்பாசப் பொய்க்கடலிற்
றோன்றுமெனைக் கைதந்து தூக்கு. (12)

சச்சிதா னந்தமயந் தானாகி நின்றகுரு
விச்சகந்தோன் றாம விருத்தலான்—மெய்ச்சீட
னாட்சியா னந்த வனுபோகி யென்றறிதல்
காட்சியனு மானமெனக் காண். (13)

நிற்குமா தார நிராதார மீதான
முற்சொலனு போக மொழிதடுமா—றச்சீடன்
புல்லுஞ் சிவானந்த போகியல வென்றறித
னல்லனுமா னத்தனுமா னம். (14)

சரிபைகிரி யாயோகந் தாம்முற்றி நாலாய்
வருசத் தினிபாதம் வந்து—திருவருளை
யொல்லையினிற் காணவந்தா ளைங்குபரி பாகியென்ற
னல்லா கமத்தனுமா னம். (15)

உரையளவை—தந்திரகலை.

சிவாகமங்கண் மூலிதமாய்ச் செப்பினதே தென்னு
எவாவொழியச் சொல்லியெனை யாள்வா—யுவாவுரிபோர்த்
தானந்த நாடகஞ்செய் யத்தனை மெய்ஞ்ஞானத்
தானந் தருஞ்சம்பந் தா. (16)

திரிபதார்த் தத்திற் சிவனைவிட் டான்மா
வறிவுமல சத்தி யனந்தம்—பிறிதலினுற்
பாலரைப்போன் மேன்மேற் பகுத்தறிவு தோன்றுமது
நாலுவித மென்றுநீ நாடு. (17)

நாலுவித மாவனகே ணற்சரியை நற்கிரியை
சீலமார் யோகஞ் சிவஞானம்—நாலுவிதத்
தாலே சிவனடியி லன்புசெய்தோர் தாம்பெறுவர்
சாலோக மாதிபதந் தாம். (18)

சரியை கிரியை தருமிரண்டுந் தந்த்ரம்
வருயோக மொன்றுந்தான் மந்த்ரந்—தருமேக
ஞானமுப தேசகலை நாற்பாத முக்கலையுட்
டானடங்கு மென்னுமறை தான். (19)

சரியை கிரியையெனுந் தந்த்ரகலை சொன்ன
விரதந் தவறுமன் மெய்யர்—அரனடியின்
மெல்வினைகள் வல்வினைகள் மேதினிமேற் செய்தபடி
செல்வமுற நீயுமொன்று செய். (20)

மந்திரகலை.

மந்த்ர கலைதான் வளர்யோக யாதமாந்
தந்த்ரகலை சொன்னபடி தான்செய்து—மந்த்ரகலை
செய்து வரும்வகையைச் செப்பக்கேண் மாணவக
வைவகையா மாசை யறுத்து. (21)

நேரா மியம நியமமுட னாசனங்க
ளார்தா ரணைபிரத்தி யாகார—மோமனுவாஞ்
சேர்பிராணா யாமந் தியானஞ் சமாதியிவை
யார்யோகத் தட்டாங்க மாம். (22)

ஆதார மாறிலரு ளோங்கரத்தோ னான்முகத்தோ
னோதுந் திருமா லுருத்திரனெந்—தாதையா
மீசன் சதாசிவன்றா னிங்கிவர்கள் சத்தியுடன்
வாசமலர் மேலிருப்பர் வந்து. (23)

மூல வளியை முடுக்கியிடை பிங்கலையைச்
சால வடைத்துநடுத் தான்றிறந்தால்—மேலாஞ்
சுழுமுனையாஞ் சித்திரமாஞ் சொல்வச் சிரமா
முழுதுமொன்றாய்க் காணுமே முன். (24)

ஆடரவக் கிண்கிணிக்கா லையனச பாநடந்தா
னீடிருபத் தோரா யிரத்தறுநூ—றாடலொலி
மெய்யிலெழுந் துள்ளடங்கு மேதினியோர் நாளொன்றுக்
குய்யுமறி வோரறிவா ருற்று. (25)

பரவிந்து வேசிலம்பாய்ப் பண்பான நாதந்
திரவொலியாய்ப் பாதத்திற் சேர்த்தே—யரனடியார்
பொற்புண்ட ரீக புரசபையி லானந்த
வற்புதன தாடொறூழி லைந்து. (26)

திருச்சிலம் போசை யொலிவழியே சென்று
நிருத்தனைநீ கும்பிடென்றார் நேயத்—திருத்துந்
திருக்களிற் றுப்படியார் சேமத்திற் சொன்னார்
குருக்கடைக்கண் ணாலறிந்து கொள். (27)

* * * * * * *
* * * * * * தெரியா—தெரியா
தனுவனைத்து நோக்கித் தகுமுயிரே தானாய்
வினையனைத்தும் நிற்கும் விரைந்து. (28)

கருவி யனைத்தினையுங் காணுங் கருவிக்
கொருவ னிவனெனவு மோரா—மருவுங்
கருவியே தானாக் கலந்தொன்றாய் நிற்கு
மருவுமுயிர்க் குற்றமேதோர் மாண்பு. (29)

புலமனைத்து நின்று பொருந்தியுமற் றுன்னைத்
திலமளவுங் காணத் தெரியாய்—மலமனமே
யங்கமே பொய்யா யகன்றபோ தாவியதன்
சங்கமே யாகத் தரும். (30)

ஊட்டி யறிவை யுறுமுடலைப் பேதமென
வாட்டியபேர்க் காவி வளமாகு--மூட்டிக்கை
வித்தாரம் செய்து வெறும்பிணத்தைத் தானாக
வைத்தார்க் குயிரேன் வரும். (31)

மனவாக்குக் காயத்தை மன்னிப்பி னல்லாற்
றனிமை யறியத் தகாதால்—மனவாக்குக்
காயத்துக் கெட்டாக் கருதியதோர் பூரணமா
மாயமே யாவியென மன். (32)

உறையுந் தனுவி னுறையு முயிர்தன்
னிறைவை யறிந்தொருகால் நில்லா--வறையுமுடற்
சேட்டையல்லான் மற்றுயிரின் சீவகமே யில்லையெனக்
காட்டுகையா லாவியிலை காண். (33)

சீவிக்குங் காயஞ் செடமாகுஞ் சீவகத்தை
யாவிக்கு நன்கா லமைப்பதல்லாற்—சீவிக்குஞ்
காயமே தானாக் கருதிய வாறெல்லா
மாயமே யென்ன மதி. (34)

ஆவியென வேறேபோய் யாக்கையே தானாக
மேவியதே யன்றோ விளம்புங்கா—லோவியம்போ
னீக்கித் தனுவை நிகழறிவைப் பூரணமா
யூக்குவதே யாவிக் கொழுங்கு. (35)

ஒன்றித் தனுவை யுறுமதனைப் பேதமெனக்
கொன்றுயிரை வாங்கக் குணமாகு—நன்றிதமக்
குற்றார் தமக்கே யுறும்புத்தி யோவாம
லற்றார் தமக்கேத மாம். (36)

சோதித்த காயத் தொடக்கற்றாற் றெல்லைமலஞ்
சேதித்த தாகுமெனச் செப்புநூல்—பேதித்த
வாவியே தானா யடையு மரனடியு
மேவியே நிற்கும் விரைந்து. (37)

மந்திரகலே.

அத்தன் சிலம்பொலிகேட் டாங்கே யனந்தரவி
சுத்தவொளி கண்டுவிந்து தூயமதி—வைத்த
யமுதையுட விற்றேக்கி யார்வத்தோ டுண்டு
விமலராய் வாழ்வார் வியந்து. (38)

மாத்திரை தானம் வடிவங் குலங்கண்மேற்
பார்த்தறியுஞ் சூனியங்கள் பாராதி—மூர்த்திகண்மெய்
மிஞ்சும்ப்ர காச மிகுமட்டாங் கத்தோடே
யஞ்சிரா றீரெட் டறிந்து. (39)

தத்துவங்கண் மேதையிலே தங்குமிரு பத்துநா
லத்தனருக் கீசத்தி லாறுகுஞ்—சுத்தவிடத்
தொன்றாகும் விந்துவிலே யோரிரண்டா நாதந்தா
னென்றுமெட்டா மூன்றணவயி லே. (40)

பிண்டமீ தாகுமுன்னே பேசும்பூத் தொன்றினிலே
மண்டியிடு மந்த்ரபத வன்னமெலாங்—கொண்ட
பிரமாண்ட மாதி பெரும்புவனந் தத்வம்
விரவுங் கலையைந்து மேல். (41)

மந்த்ரகலே சொன்னீர் மருவுமுப தேசகலே
யெந்தையே சொல்லி யெனையாள்வீர்—மைந்தா
சரியைகிரி யாயோகந் தாம்முற்றி வந்தோர்க்
கருளுபதே சந்தெரியு மாங்கு. (42)

உபதேச விளக்கம்.

குருவே வுபதேசங் கூறென் குருவின்
குருவின் குருவின் குருவின்—குருவின்
குருவின் குருவின் குருவின் குருவின்
குருவுபதே சஞ்சொல்வேன் கொள். (43)

கொற்றங் குடிவாழ் குருவா முமாபதிசொல்
நற்றிரு வருட்பயனே நாடியே—யற்பாய்
வினவுமவன் சொல்லும் விடைவெண்பா நூறு
மனேலயமாக் கேட்டருளில் வாழ். (44)

உபதேசகலை.

புறநூ லனைத்தையும் பூருவமாத் தள்ளி
யறவாணர் சித்தாந்த மாய்ந்து—துறவாவா
ருண்மைநிலை தன்னை யுயர்ஞானத் தேயறிதல்
இண்மையுப தேசந் தெளி. (45)

ஞானகாண் டம்பற்றி நம்ப னிறைவனெனத்
தானவனை யெண்குணத்துத் தானுவென—மோனமுற
முந்தும் பசுபாச முற்று முடையனெனச்
சிந்தித்துத் தேர்க சிவம். (46)

பக்கப் போலி முதலியன.

உருவி லுயிர் காணு ருருவ முபய
மருவஞ் சொரூப மறியார்—சரியைமுத
ஞலுபா தந்தெரியா நாட்டிற் பசுக்களே
நாலுபக்கப் போலியென நாட்டு. (47)

மூவேதுப் போலியா மூவேழை யுங்கேளாய்
தாவுபேய்த் தேரிந்த்ர சாலமாய்—மேவு
முலகென்று நிதநியமென் றோதி மயங்கு
முலகாயு தன்முதலோ ரோர். (48)

உவமானப் போலி யொருபதினெட் டுங்கேள்
சிவனிதுபோ லென்றென்று செப்பிற்—சிவமுதல்தா
னெப்புயிர் மாயைகடந் தோங்கிநிற்போ னென்னுமை
லப்படியே யென்றறித லாம். (49)

இரண்டிரு பத்திரண் டென்தோல்வித் தான
மரன்பரம தத்துவமென் னுமற்—பரசமய
வேறுதெய்வஞ் சொல்குருவு மெய்யென்று கேட்டதனைத்
தேறுகின்ற சீடனுமாஞ் செப்பு. (50)

போலி இத்துணையும்.

மெய்யுணர்தலிற் பெறும் பொருள் ஆகமப் பிரமாணத்திற் போல ஏனைப்பிரமாணங்களுக்குத் தெற்றென விளங்காமையை வகுத்துக் கூறுகின்றார்.

*　*　*　*　*　*　*

*　*　*　*　*　*　*

*　*　*　*　* கவலையுட—னோடுவார்
மானேயீ தென்னபுது மை. (51)

சாத்திரஞ்சொல் பானு தருகிரணங் கோல்கொடுப்போர்
பார்த்தறியுங் கண்கள் படலமிருள்—சோத்தமாங்
கோற்றெழில்பின் கண்படலங் கூரிருளை மாற்றியொளி
போற்றவைப்போ ரென்றுமுண்டு போற்று. (52)

நெஞ்சுடையாய் நீகாந்த நின்னிடத்திற் பாசமிரும்
பஞ்சலெனு மீச னணைப்பவனும்—பஞ்சமல
நாசமுற நான்போயெ ழுயகனுங் காந்தமுன்னே
நேசமுறு மூசிபெண்போ னில். (53)

கண்ணுடையார் புன்கோலுங் கண்ணில்லார் பொன்கோலு
மெண்ணு மிழிவுசிறப் பென்னவே—கண்ணுதலின்
சேணு ரருள்கண்டார் தேகமழ கின்மையுங்கண்
காணு ருடலழகுங் காண். (54)

அண்டம் விழுங்குங்கா லக்கினிபோ லேகசிவந்
திண்டிறலா காசம்போற் சிவவெளி—கண்டிருந்தால்
வல்லிருளு மாயை மயக்கும்விவ காரமெனும்
பல்வினையுந் தோன்றாது பார். (55)

பாற்கடல்போ லேகசிவம் பன்மீன்போ லேபசுக்கள்
சேர்க்குமறி வின்றிச் சிறுமீனைப்—பார்த்துழன்று
வாடுதல்போற் பெத்தம்பால் வாய்திறந்தே யுண்டுவிளை
யாடுதல்போற் சீவன்முத்தி யாம். (56)

அண்டத்தில் வாயுவா தாரமா யெண்ணிலணுத்
தண்டரையா தாரமின்றித் தானிற்கு—மண்ட
மனந்தத்துக் கீசனரு ளாதார மாகு
நினைந்தாதா ரத்துணீ நில். (57)

அகச்சா ளரத்தி லனுத்தோன்று மல்லாற்
சுகப்பானு முன்கண்ணிற் றோன்றச்—சகக்காட்சி
காயத்திற் றோன்றுமல்லாற் கண்ணுதலா னந்தவொளி
நேயத்தி லில்லை நினை. (58)

ஓயாமல் முப்பொருட்கு முள்ளசுபா வங்கண்டால்
வாயில்லை யென்றறிந்து மாணவக— பேய்போல
முன்னிலையை நாடியே மோசம்போ னையையோ
வென்செய்வேன் சங்கரா லிங்கு. (59)

இரவிகிழக் கேயுதிக்கி லெண்ணில் படிகம்
பரவுநா னுவன்னம் பற்றும்—இரவியா
முச்சிப் படிகம்போ லுன்னையறிந் தேபாச
நச்சாம னீசிவத்தை நாடு. (60)

பேரிருள்வந் தாற்கண்கள் பேரிருளாங் கொஞ்சவொளி
யாரவே வந்தவுட னவ்வளவாஞ்—சூரியன்மன்
வந்தவுட னந்த வடிவாகு முன்சோதி
யிந்தவித மென்றே யிரு. (61)

செயலுண்டாய் நின்றார்க்குச் செல்வமுண்டா மென்றே
மயல்கொண்டா யாங்கதுதான் வாரா—செயல்மாண்டே
யுன்னையறிந் தேயிருந்தா லுள்ளதுதந் தேகசிவன்
றன்னை முழுதுந் தரும். (62)

பொய்யென் றறிமைந்தா பூதாதி யாமுலகை
மெய்யன் சிவானந்த மெய்ப்பொருளா—நெய்யமுதந்
தண்கருப்பஞ் சாறு தயிர்பாறேன் சர்க்கரையை
யுண்பதெந்நா ளென்றுவா யூறு. (63)

நாயக னேகணவன் ஞானசத்தி தானொருத்தி
தாயகம்வா ழெண்ணிறந்த தாதிகளின்—நீயொருத்தி
யன்னையை வேண்டிக்கொண் டாசையவன் மேல்வைத்தால்
மன்னவனோ டொன்றாக்கு வாள். (64)

நீநாத னெல்லிலே நின்செயலற் றேதிரிந்தா
னென்னதென் றேவாய் நவின்றாலு— மானதந்தான்
பற்றிடினும் பாவத்தைப் பாதகஞ்செய் தாலுமுடற்
குற்றம் பணியாக் கொளும். (65)

ஆருந் திருவருளி லாற்றுநீர்க் குள்ளொழுகுங்
கோரைபோ லுன்னைக் கொடுத்திருந்தால்—நாரணனும்
பங்கயனுங் காணாப் பரிபூ ரணனெடுத்துக்
கொங்கலர்தாள் சேர்த்துக் கொளும். (66)

ஆகாசந் தானுமசை வற்றுநிற்கச் செங்கதிரோன்
ஏகாச மாமிருளை யிங்கொழிக்க—நீகாய
மாகாம லெங்குமறி வாயசைவற் றேநின்று
லேகன் மலமொழிக்கு மின்று. (67)

அண்டமனந் தங்கோடி யாபோ சனஞ்செய்யுந் [ண்டு
தொண்டரையாட் கொள்ளுமொரு சோதியைநீ—கண்டுகொ
தெண்டனிட்டுக் கும்பிட்டுச் சேவித்து நிற்கவென்னுண்
மண்டன் புனக்கு வரும். (68)

உன்கண்ணுக் குள்ளே யொருவனு னந்தநடம்
வன்கண் மறைப்பான் மறைந்ததுகா—னுன்கண்ணிற்
றுன்பமற வஞ்செழுத்தாஞ் சோதிமருந் தைஞானத்
தன்போ டுரைத்திட் டமு. (69)

முக்காடிட் டேபெண்ணை முன்னெழுத்தஞ் சுற்பவமாங்
கைக்கவருஞ் சொற்பனத்தைக் காட்டுமே—முக்காடுஞ்
சொற்பனமு நீங்கியே சோதியருட் கையிரண்டாற்
றற்பரனின் பத்தழுந்தல் சாற்று. (70)

* * * * * * * *
* * * * * * * *
* * * * * * * *

மருவுமருந் தென்ன மதி. (71)

பிணிக்கு மருந்து பிரியாம னின்று
தணிக்கு மருத்துவனைச் சார்ந்து—பிணியை
வருத்தியதிங் குற்ற மருந்தோதீர்ப் பானோ
திருத்தமா யொன்றதனைச் செப்பு. (72)

மருந்தே பிணியை வருத்திற்றீர்ப் பானைத்
திருந்தவழி பாடவரேன் செய்வர்—பொருந்துமரா
னுற்ற மலத்தை யொழிப்பன் கருமத்தாற்
பற்றிவழி பாடெவர்க்கும் பாங்கு. (73)

ஆவி நிருமலமே யான தானுக்கு
மேவி யருத்தும் வினையாமாற்—கூவுஞ்
சரியாதி நான்குந் தரித்ததனா லன்றோ
பிரியாச் சிவனான பேறு. (74)

நிருமலனே யாவி நிருமலமே யாக்கி
யொருநலமாய் நிற்கை யொழுங்கா—மூறுமலத்தை
மாற்றி யவனே மருவுமா லாங்கவற்குந்
தேற்றமே யில்லையெனத் தேர். (75)

இருளகல தாகு மிசைந்தவொளி யல்லால்
மருளகலு மீசன் மருவிற்—றெருளுங்கா
லத்துவித மாமா லடைந்த தனுவினையுங்
கத்தனுக்கே யாகுமெனக் காண். (76)

ஊனற்றும் போக முயிர்நத்திற் றென்னவுயிர்
தானற்றும் போகந் தலைவற்காந்—தீநத்த
னுற்ற மலத்தா னுறுமே யரன்கருணை
பற்றியதா னுண்பான் பரிந்து. (77)

மலத்தோ டடங்கி மருவியபே ருண்பார்
மலமே யருந்தல் மருவா—நலமாகு
மீசனோ டொன்று மிசைவா ரருந்துமிக்க
வீசனே யுண்ணானென் றெண். (78)

ஆவி மலத்தோ டடங்குவது தானாக
மேவி யதுவாய் விளங்குமா—லாவியெனத்
தானே யிலையாற் றருமலமே தானாகு
மூனா மதுவாமென் றோர். (79)

சிற்றுயிரே யுற்ற செயலானற் றேவனுக்கு
மற்றுருவாய் நின்று மருவுமா—லுற்றமலச்
சேட்டையே மாற்றுஞ் செயலாற் சிவனாகு
நாட்டமே யாகுமென நாடு. (80)

வினைமருந்தா னோக்கி விரும்புங்கா லீச
னினைவனைத்துந் தானாகி நிற்பன்—பினைமலத்தி
னாட்டமே யின்றே நடந்தமல மைந்தும்பின்
னோட்டமே யன்றோ வுரை. (81)

☞ குறிப்பு :—* * 1-81 எண்ணிட்ட வெண்பாக்கள் தினப்பிரதிகளில் முன்பின்னாகக் கோக்கப்பட்ட பழைய வடுகளிற் காணப்படுவன. இவை வேறு வேறு ஸ்ரீ கோசங்களினின்று பெயர்த்து எழுதப்பட்டிருப்பினும், அவ்வேடுகள் சம்பிரதாய வேட்டோடு விரவியும், ஒருங்கு சேர்த்து அமைக்க ஒருவாறு ஒன்றுபட்டும் உள்ளன. கூடியவரைக்கும் செய்யுளியையும் பொருளொழுக்கமும் இவ்வொற்றுமையைத் திடப்படுத்தும். இச்செய்யுள்களில் * * 1 என்று இங்குக் குறித்த செய்யுள் தொடங்கி ௬௰ என்று தொடங்கியும், 12 முதல் க தொடங்கியும், 28 முதல் க தொடங்கியும், 51 முதல் ௪௰ தொடங்கியும், 70 முதல் எக தொடங்கியும் மூலவேடுகளில் எண்ணிடப்பட்டுள. அன்றியும் உவமானத்திற்றின் ஆக க௬௬ எனவும், அநுமானத்திற் பிரமாணத்திரயத்திற்றின் ஆக உ௰௩ எனவும், தந்திரகலையிற்றின் ஆக உ௰அ எனவும் தொடரெண்கள் காணப்படுகின்றன. இவற்றின் விவரம் முழுவேடுகளும் ஒருசேரக் காணுமிடத்து விளங்குமாதலின், இச்செய்யுள்களும் சிதைந்து போகாமே இங்குத் தனியெண்கொடுத்துப் பிரசுரிக்கப்பட்டன. ஏற்ற இடங்களி னமைத்துக் கொள்க.

---

௬. ஞானதீட்சை விளக்கம்.

அருளாலு மாகமத்தி னாலுமள வாலும்
பரமசிவ சூரியனைப் பார்த்தே—யிருடீர்ந்து
வாழலா மென்றசித்தி வாய்மையருள் தண்பிறைசேர்
தாழ்சடையாய் ஞானசம்பந் தா. (அ௬)

வாசக மின்றி வரும்பரிச மின்றிமைந்தர்க்
காசான் றிருநோக் கருளாலே—பாச
மகற்றிய வீசனரு ளானந்த ஞான
சுகப்பிரபை தோன்றுமுண்மை சொல். (அஎ)

மெய்ஞ்ஞானந் தானேவிளையும்விஞ் ஞானகலர்க்
கஞ்ஞான வச்சகலர்க் கக்குருவாய்—மெய்ஞ்ஞானம்
பின்னுணர்த்து மென்ற பெரியவெண்ணை மெய்கண்டா
னுன்னுசம்ப்ர தாயஞ்சொல் வோம். (அஅ)

தேசிகனை யாவேசஞ் செய்தே சிவன்சகலர்
பாசமறப் பாரனென்றோர் பார்வைபெற்ற—தேசிகன்றான்
பார்த்தான் பழையவினைப் பஞ்சமலக் கொத்தையெல்லா
நீத்தா னெனுஞ்சொ னினை. (அகூ)

பிறவிக் குருடன்கண் பெற்றுலகைக் காண
விறைபானு நீக்கமிரு ளென்ற—மறைஞான
சம்பந்த னைந்தன் றான்ஞானக் கண்விழிப்பா
னம்புசச்சி தாநந்த நாட்டு. (கூ௦)

வாயிலா மட்குடத்துண் மாநீர் நிறைதல்போற்
றூயினு நல்லன்பான் சற்குருவி—னேயத்
தருநோக்கத் தாலுயிர்க்கு ளானந்த வெள்ள
மிரவுபகல் போக்கி யெழும். (கூக)

சூரியகாந் தக்கல்லிற் சூரியன்மெய்ப் பேரொளிதான்
சேரும்போ தங்கியெழுஞ் சிற்கனமாய்ப்—பேரறிவா
மாசான் றிருநோக்கா மாதித்த னுயிர்க்குட்
டேசோ மயமுதிக்குந் தேர். (கூஉ)

மீனோக்கத் தாலே விடுத்தசினை நீர்தானு
மீனாக வேவளரு மெய்க்குருவின்—ஞானத்
திருநோக்கத் தாலுயிருஞ் சிற்றறிவு நீங்கிப்
பரிபூ ரணவறிவாம் பார். (கூ௩)

அபர பரஞான மம்புவியா தித்த
னுபயவொளி போல்வந் துதிக்குஞ்—சுபமாகும்
பேரன்பர் தம்முளத்திற் பேரருளாஞ் சற்குருவின்
பூரணக டாட்சமுற்ற போது. (கூச)

இருளுதய நீக்கு மிரவியைப்போ லென்னு
ளருளுதயம் வைத்தனனென் றூர்த்—திருஞான
சம்பந்தன் சொல்லுமவன் சத்தியநிர் வாணஞ்செய்
நம்புகுயி லாதியையும் நாடு. (கூரு)

கொண்டநிலை யெல்லாங் குலைந்ததே யாணவத்தின்
மிண்டையெல்லாம் வேர்பறித்து விட்டதே—மண்டருளாற்
சம்பந்தன் பார்த்தநிலை தானென்னும் வீரசைவ
ரம்பொன்வெண் பாநீ யறி. (கூகூ)

கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபரனென் றோர்திருப்பேர் கொண்டு—திருநோக்கா
லாழ்வினையைப் போக்கி யுடலறுபத் தெட்டுநில
மேழுமத்து வாமூன் றிரண்டு. (௬௭)

ஆணவ மான படலங் கிழித்தறிவிற்
காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டிப்—பூணு
மடிஞானத் தாற்பொருளு மான்மாவுங் காட்டிக்
கடியார் புவனமுற்றுங் காண். (௬௮)

தேக்குபர மானந்தத் தெள்ளமுதங் காட்டியெங்கு
நீக்கமற வைப்பா னினையென்று—காக்குஞ்
சிவானந்த மாமுனிக்குச் செவ்வே யுரைத்த
தவாவுடனே நன்றா யறி. (௬௯)

இதற்குப் பிரமாண மெத்தனையோ வுண்டவ்
விதத்தை யுரைக்கில் விரியு—மிதற்குப்பேர்
சாம்பவம் பானுமதி தானுதிக்கும் போதிருடான்
போம்பளிங்கண் டங்கட்குப் போல். (௭௰)

காழிப்பிரதியின் மாத்திரம் அதிகமாகக் கண்ட செய்யுள் இதன் கீழ் 1-17 எண்ணிட்டவை.

குருநோக்கா லிப்பேறு கூடினால் வாக்கும்
பரிசமுமே னல்லும் பகலுந்—திரமுறவு
மெய்வளரு நேயம்பின் மேவுமிளம் பக்குவர்க்குச்
செய்வதற்கு வைத்ததெனத் தேறு. (1)

இரதஞ் சிவன்குளிகை யெந்தை குருவாம்
பரவுபொன்னாஞ் செம்பு பசுவாம்—விரவுங்
களிம்பா ணவஞ்சிவப்புக் காண்மாயை நாற்றம்
விளைந்தகன்ம மூன்றால் விடும். (2)

பஞ்சைநீ றாக்குமோ பானுவெயின் முன்காந்தம்
பஞ்சைநீ றாக்கும் பரிசுபோ—னஞ்சணிந்த
கண்ட னெனுமிரவி காந்தமெனுஞ் சற்குருவாற்
பண்டைமலப் பஞ்சொழிக்கும் பார். (3)

கடலிறைவ னாவிநீர் கார்வண்ண மாயை
நெடுநாற்றங் கன்மமல நீறாப்—படல்சேர்
நரர்வாழ மேகந்தா னன்னீர்செய் தாற்போற்
குரவனுயிர் சுத்தமாக் கும். (4)

மேகமுப்பு நீரை விழுங்கிநன்னீ ராய்விடினும்
வேகமுட னேடியே வேலைநீ—ராகுதல்போன்
மெய்க்குரவன் றீண்டுதலான் மேலான நீபொய்யிற்
கைக்கவிழா தேயருளைக் காண் (5)

விறகுபல போலுயிர்கண் மெய்யனல்போ லீச
னுறைநீர் மலமா முலர்ந்த—விறகுபோற்
பக்குவர்க டக்கடைக்கோல் பார்வைமுதற் றீக்கையனல்
கக்குதல்செய் வோன்குருவாய்க் காண். (6)

சற்குரவன் றுள்சீடன் றன்றலைமேல் வைத்தெடுத்தல்
பொய்க்கடலி லான்மாவைப் புக்கெடுத்தல்—மெய்க்கணினை
வைத்தல் தரிசனமா மார்புவைத்தல் சுத்தியா
மொத்தபூத லாபமென வோது. (7)

ஆர்கருட பாவனையா லாடரவு தீண்டினரைத்
தூரத்தே யுன்னல் தொடல்பார்த்தல்—ஆர்வத்தாற்
பேச்சினு லவ்விடத்தைப் பேதிப்பார் சற்குருவும்
வாய்ச்சசீ டர்க்கொழிப்பான் மாசு. (8)

பொதுஞானத் தாற்சீடன் புந்தியன்பைக் கண்டே
யிதமகித மாயைமல மெல்லா—மதமாகத்
தீர்த்தருளா னந்தத்தைச் சேரவைப்பன் சற்குரவன்
பார்த்தருளா லுள்ளே பரிந்து. (9)

திருநோக்க மாதியாந் தீக்கையத னுலே
பரிபக்கு வர்க்கொழிப்பன் பாசங்—குருமனதா
லாறத்து வாவு மடங்கவே சோதித்துத்
தேறவருள் வைப்பான் சிலர்க்கு. (10)

இவ்வகையில் லானில்லார்க் கெந்தை விதித்தபடி
ஐவகையாங் குண்டமண்ட லாதியிலே—யைவகையும்
பாவித்தே யத்துவாப் பாச மறுத்தருள்வான்
மேவுகிரி யாதீக்கை மேல். (11)

சகச சமாதியருட் சம்பந்தன் செய்யு
மகிழுயிர்க்குச் சத்தியநிர் வாணம்—புகழ்சேர்
சிதம்பரநா தன்செய் திதேபோது ஞான
விதம்பலவுங் கேட்டு விளம்பு. (12)

ஈன்றானை முன்மாசி லாமணியோ சிக்கப்பின்
ஞான்றாநர் சச்சிதா னந்தனானை—யீன்றானைக்
கண்டிலமென் றோதமைந்தன் கண்ணுதருள் சேர்த்தனனான்
பண்டென்றான் விஞ்ஞானம் பார். (13)

உண்மையுப சாரங்க ளென்னறிவாற் காண்பதல்ல
வுண்மையுப சார முயர்குருவின்—கண்மலரச்
செம்மையாய் நின்றே திருவாய் மலர்ந்திடக்கேட்
டம்மையப்ப னுண்மை யறி. (14)

தேனிருக்கும் பூவைச் சிறையளிதே டிக்கண்டே
பானஞ்செய் தேதன் பசிதீரும்—ஞானம்
விளங்குகுரு வைத்தேடி மெய்ச்சீடன் கண்டே
களங்கொழித்தா னந்தமுண்பான் காண். (15)

எக்கால மானாலு மெத்தேச மானாலுஞ்
சற்குரவன் றோன்றியரு டந்ததே—நற்கால
நற்றேச ஞானமின்றே னற்கால நற்றேசந்
துர்க்காலந் துர்த்தேசஞ் சொல். (16)

தெய்வமொன்றி னின்றதனைத் தெண்டனிட்ட வந்தகர்க்கு
மெய்விழிக டந்ததே மெய்யாகிற்—றெய்வம்
வரந்தந்த தான மறந்தே யிகழ்ந்தாற்
தருந்திரோ தானநினைத் தாழ்ந்து. (17)

ஞானதீட்சை விளக்கம் இத்துணையும்.

2. சாத்திர சம்பிரதாயம்.

க. பரம் பொருள்.

வஸ்து நிச்சயம்.

உடலி னுயிர்போ லுலகுக் கொருகோ
னடல்கொள் ககனமென வாங்கே—விடலில்
பரம்பொருளாய்ப் பாநுவாய்ப் பண்டருளுஞ் சத்தாய்ச்
சிரம்பொருளாய் நிற்குஞ் சிவம். (௱க)

சிவனே பரம்பொருள்.

பரம பதியீசன் பாநு வனாதி
பிரமம் பசுபதி பேசிற்—றருமஞ்
சிவங்கோசம் லிங்கஞ் செறியிருளை நீக்குந்
தவம்போக மென்பர் தவர். (௱உ)

சிவசத்தியுண்மை.

முடிவிலா வப்பொருட்கு முன்னுசிவ சத்தி
கடித லிலவாகக் காணுஞ்—செடிகொ
லருக்கனுக் கொள்ளொளியி னுங்கே யபினை
யிருட்கடியு மென்றே யிசை. (௱ங)

பூரணனகண்டன்.

அங்கி யுயிரா வனல்சிவமா வாங்கதனிற்
பொங்குமொளி போன்மாயை போதலாற்—றுங்க
வகண்ட நிலைக்கிங் கழிவில்லை கண்டா
யகண்டமே பூரணமு மாம். (௱ச)

தியேதா.

மூவருண் மூர்த்தி முதல்வ னவர்தலைவன்
தேவர்க்குத் தேவன் சிவபெருமான்—யாவர்க்கு
மேலவ னேயன் விமலன் விகிர்தனுற்
சீலவன் சீருத் திரன். (௱ரு)

பொருளொன்றே யென்பதன் பொருள்.

ஒன்றே பொருளென் றுரைத்த மறையுண்மை
நன்றே பொருள்கொள்க நானிலத்து—மன்றே
நிறையும் பரப்பிரமம் நின்மலமா யொன்றே
குறையு மிலையதற்குக் கூறு. (௱சா)

முப்பொருளுள வென்றல்.

நிட்களமா மத்தன் நிறுவும் பசுவனந்தம்
புட்களமாம் போகம் புசிப்பிப்ப—னுட்களங்க
மந்த மலமா மனுதியிவை மூன்றுமெனும்
முந்து மிறைவன் மொழி. (௱எ)

பாசம் மித்தையெனல் கூடாது.

அறிவை மறைக்கு மனுதி மலந்தான்
செறியிருள் மாயை செகமாம்—மறிக்குஞ்
செயல்கரும மாகமமுஞ் செய்ய மறையு
முயல்தருமோர் கூற்றே யுணர். (௱அ)

மலமில்லை யென்பார் கூற்றை மறுத்தல்.

முத்தி முடிபை முதற்கண்வைத் தெண்ணுவா
ரத்த னுரையறியா ரையாகேள்—பெத்தந்
தெரியார்க்குக் கூறுந் திறமிலையே ஞான
முரியார்க் குணர்வா முலகு. (௱கூ)

ஆன்மாவே பரமான்மா அலன்.

நின்ற வுயிர்க்குள் நிறைந்த வுயிராகி
யென்று மிறைநிற்கு மென்றுணரி—னொன்று
நிலைத்ததுவே யோரார் நெடுமாற்றம் பொய்க்கும்
நிலைத்ததுவே நம்பன் நிலை. (௱க0)

பிரமம் அவத்தாத்திரயத்தால் வேறுபட்டு மூவகை ஆன்மா ஆதல் அன்று.

சாக்கிரத்துஞ் சொப்பனத்துஞ் சாற்றுஞ் சுழுத்தியினும்
போக்குளனு யான்மாப் புரிவனே—னீக்கமிலாச்
சிவனவன் தானல்லன் செப்பும் பரனல்ல
னவன மூன்றுயிரே யாம். (௱கக)

ஆகம வளவையே யளவை.

ஆகமத்தா லன்றி யளக்கு மளவைகளு
மூகமு மொன்று வுணரேமாற்—சோகம்
பிறந்த வுயிர்க்குச் சுகப்பேறு தோன்று
விறந்தநிலை யாரறிவா ரிங்கு. (௱கஉ)

அகண்டத்துவத்தைத் திருட்டாந்தப்படுத்த லாகாது.

காட்டத்துத் தீயென்னக் காபாலி நிற்குநிலை
நாட்டத்துத் தானு நான்காட்டாக்—கூட்டும்
மலைவைப் பொறிக்குணர்த்தல் மாண்போ வலகில்
நிலையறிவார் கொண்ட நெறி. (௱௧௩)

உ. பதிப்பொருள்.

சிவனே பதியாகி மூர்த்திகளுட் டனது சத்தி பதிவித்தல்.

அருவாகி நின்ற வரனுருவாய் வந்து
திருவாளர் தம்பாற் றிகழ்ந்து— கருவாகு
மெங்கள் வினைபோக்கு மின்னருளை யீயுமே
திங்கள் முடியணிந்த தே. (௱௧௪)

அணுபக்ஷ பஞ்சகருத்தர்களும் சுத்த மாயையும்.

பேருருவ மைந்தும் பெருமாயை யாங்கவர்க்குச்
சீரிடமு மாங்கே செறியுமாங்—கூருருவத்
தத்துவமுஞ் செய்தொழிலுந் தானு வமைத்தருள்வன்
சத்துவமு முண்டோ தவர்க்கு. (௱௧௫)

பதிப் பொருட்குச் சொரூபலக்கண முளது.

சகளத்தை நீத்த தனிப்பொருளே சத்தா
முகளத்தைக் கண்ட துருவே—யகளங்க
ளுண்டசிவ னல்லா லனைவோரும் புற்கலரே
பூண்டசிவ தத்துவத்தைப் போற்று. (௱௧௬)

பசுபதி சிவனே.

மூர்த்தப் பொருளுண் முதற்பொருளா மெந்தமக்குச்
சாத்திரங்கள் சாற்றிச் சழக்கறுக்கு—மாத்தன்
பரசிவனே யல்லாற் பசுக்க ளலவே
தரசிவனே யெங்கள் தலை. (௱௧௭)

சிவனே குருவின் கோலங் கொள்பவன்.

ஆணவத்தை மாற்ற வரும்பொருளை நல்கியிடப்
பூணவத்தை போக்கப் புரந்தருள—நாணமின்றி
நற்றேவர் யாவருளர் நானுகி நின்றகுரு
மெய்த்தேவ னுன் விழைந்து. (௱௧௮)

மூர்த்திபேதங்கட்கு முதல்வன் ஒருவனே யமையும்.

கோக்கள் பலநிறத்த கொள்ளும்பால் வெண்ணிறமே
யாக்கள் பலவா யமர்ந்தாலும்—பூக்கள்
உயருந் தருமை யொருவன் குரவன்
அயரும் பசுக்க ளவைக்கு. (௱கக௯)

பதியாயினும் தத்துவாதீதன்.

ஆறாறு நீத்த வருவே பசுபதியாம்
நீறாறு பூத்த நிமலனே—பேறாறு
தந்த விமலன் றருமைச் சிவஞானி
யெந்த முதல்வ னிறை. (௱உ௦)

சிவனே அவிமுத்தன் விசுவேசன் என வியாசர் கூறுதல்.

கங்கைப் புனல்படிந்து காசி யவிமுத்தத்
துங்கவிசு வேசற் றுதித்ததனாற்—பங்கமறும்
வேத வியாசன் விளம்புமுரை யிற்காணீர்
நாதமுடி வாஞ்சிவனை நன்கு. (௱உக)

சிவனே ஞானசம்பந்தன்.

ஞானசம் பந்த னவைமார் தருமைக்கோன்
மோனசம் பந்த முறைநாட்டித்—தேனக்க
கொன்றை யணிந்த குருவென்று தான்மியத்தை
யின்றே யுரைத்தா னிவண். (௱உஉ)

சிவன் வேறாயினும் முத்தியிற் கலப்பனெனல்.

பாலுண்ணு வீயிற் படிற்று நெறியாரை
மேலெண்ணார் பேதமுறப் பேசுவார்—நாலெண்ணு
ரத்துவித மாக லருமறையின் மெய்க்கருத்துச்
சத்துவித மீதென்றே சார். (௱உ௩)

௩. ஐந்தொழில் விளக்கம்.

குணாதீதனெனினும் ஐந்தொழிற்குக் காரணன்.

ஆதித்தன் முன்ன ரலருஞ் சலசம்போ
லாதி பரன்முன்ன ரச்சத்தி—நேதித்து
மாயா சகமெல்லா மாண்பின் விரிக்குமென
நேயா விதனை நினை. (௱உச)

பரமகாருண்யத்தாற் செயல் செய்தல்.

வண்ணான் செயலறிதி வாக்குக்கெட் டாப்பரம
னெண்ணானே வெம்மலத் தேற்றத்தை—யுண்ணான்
விளையாட் டொருவிதமே யொக்குங் கலைகள்
களையாட்டாக் கூறுங் கணக்கு. (௯௨௫)

பரமேசன் செயற்றிறம்.

வேண்டியவா நல்கி விருப்பொழித்துத் துய்ப்பித்து
வேண்டி வினையறுத்து வெம்மலத்தைத்—தோண்டியே
செம்பொன் மயமாக்குஞ் செல்வன் விகாரியல
னம்பொன்மன் றத்திறையே யாம். (௯௨௬)

சிவன் பக்ஷபாதி யலன்.

தற்போதத் தார்க்குத் தமவிச்சை யாற்கன்ம
முற்போத மாக முளைத்தமையா—னற்போதன்
தீர்ப்பான் வினையறிந்து தீர்த்தல்போற் செய்வனே
யோர்ப்பாய வல்வினையை யோர்ந்து. (௯௨௭)

வினைக்கீடாகப் பிறவிதருதல்.

தீவினையு நல்வினையுஞ் செய்த வளவினவே
மேல்வினையைத் தீர்க்க விமலனே—பூவினில்
விண்ணிற்பா தாளத்தில் வேண்டுருவந் தந்தொழிக்க
நண்ணுவனே ஞாலத்து நன்று. (௯௨௮)

படைத்தல்.

பந்தத்தை நீக்குதற்குப் பண்ணு முடலுலகு
நிந்தித்தற் கன்று நினைமின்கள்—நந்தமது
மூவுடல மூன்றவத்தை முன்னோன் றரவந்த
தேவியலைத் தானே தெளிந்து. (௯௨௯)

காத்தல்.

தனுவைக் கரணத்தைத் தாங்குபுவ னத்தை
மனுவினுறு போகத்து வாழ்வை—யுனியே
வனையுந் தொழிலதனை மாண்டதிதி யென்ப
புனையுந் தவத்தார் புகழ்ந்து. (௯௩௰)

அழித்தல்.

உளங்கத் தொருவனென வோரா வளவுங்
களங்க மறுத்ததனைக் காணு—துளங்கு
மிளைப்பொழிக்க வென்றே யெணித்துடைப்ப னல்லான்
களைப்பொழியுங் கண்டுகொண்டக் கால். (௱௩௧)

மறைத்தல்.

மாண்ட பொழிற்கு வகுத்த வளைவென்ன
வீண்டு வினைக்கிங் கியல்காட்டித—தூண்டுந்
திரோதந் திரையாகுஞ் செய்வினைக்க ணூன்றும்
விரோதமில் லாத விளைவு. (௱௩௨)

அருளல்.

துலையொத்த காலைத் துரியன் குருவாய்
நிலையொக்க நின்று நிகழ்த்தி—மலமற்று
நற்போக வின்பத்து நண்ணுவித்தல் காரணமே
யற்போக மான்ற வளி. (௱௩௩)

தீக்கை புரிதல்.

ஞான வதிதீக்கை நற்சீட னுக்குளத்து
மோன குரவனை முன்னிட்டுப்—பானு
தலமேவிச் செய்தல் தகுதி தகுதி
புலமேவக் கண்டோம் புலத்து. (௱௩௪)

இவையாவும் இறைவன் அருட்புறம்.

ஆற்றல்சா லைந்தொழிலு மான்ற சிவதீக்கைத்
தேற்றமுறு மெய்த்தொழிலுந் தேவேசன்—சாற்றுங்காற்
சிற்பரமெய்த் தன்சத்தி செய்யத் திருவருள்வன்
மெய்ப்பரனைக் கண்டுளத்தே வேண்டு. (௱௩௫)

ஆரியன் ஞானகுரு.

ஆரியன் நற்குரவ னுகு மிருவ்குப்பு
மோரியலே கண்டிங் குவப்பராஞ்—சீரியர்தாம்
நான்மறையு மங்கமோ ராறுஞ் சிவாகமமு
மேன்முறையாக் கொண்டன மேல். (௱௩௬)

ஐந்தொழிற்கு ஒழிவில்லை.

இறைவ னறிவா னியங்குமுயிர்க் கூட்டம்
மறைக ளலகுரையா மாண்ட—துறையினின்
மாயை யுளமட்டு மன்னுயிரு மைந்தொழிலு
மேய வுளவே யிவண். (௱௩௭)

௪. ஐந்து மலம்.

மலம் சகச மேனும் அதன் வீக்கம் கேடும்.

திரிமலந் தீர்ந்து சிவனவ னாமே
லொருவு மலமியற்கை யொன்று—தெரிவிலதே
யென்னிற் களிம்பிங் கியலுமச் செம்பத்தே
யுன்னி விதைக்கொள்வா யோர்ந்து. (௱௩௮)

மலங் கெடாது நீங்கும்.

கொடுத்துப்பார் செம்பிற் குளிகைதனைக் குத்தி
மடுத்துப்பார் செந்நெல்லை மாண்பி—னடுத்த
தவிடுமியவ் வங்குரந் தாமெங்கே யாங்கே
புவியடுமம் மும்மலமெம் முன். (௱௩௯)

முத்தர் பலராதல் கூறுதல்.

முத்தர் சிவயோகர் முன்னுஞ் சிவஞானர்
பெத்த மகன்ற பெரியார்தா—மித்தவத்து
மூவகையாஞ் சித்திபெற்ற முன்னோர் பலர்காண்டு
மாவகையா ரன்றே யவர். (௱௪0)

ஆன்மாவையே ஐம்மலமும் அடுத்தன.

செம்புதனிற் காளிதமுஞ் சேருமணு முந்நிறமு
மும்பர்நிறத் தோங்கு முயர்நிலையும்—வம்பவிழுஞ்
செய்தொழிலு மானத் திகழு மலங்களைந்து
முய்வகையா ரோர்வா ருணர்ந்து. (௱௪௧)

ஆணவமலம்.

செறியந்த காரந் திரிக்குமல மாத
லறிகவே நீசுவே தாச்வ—தாத்துஞ்
சருவசா ரத்துந் தகுநிரா லம்ப
வுரிமை யுரையகத்து மோர்ந்து. (௱௪௨)

மலகாரியம்.

மூலத் தனந்தனு மூர்ச்சைப் படுநிலையு
ஞாலத்துக் கண்டறிந்த நம்பினத்தார்—மேலை
மலமெல்லாஞ் சேர்க்கு மலத்துண்மை காண்ப
ரிலமில்லா ரீதுணரா ரீண்டு. (௱சங)

காரணவத்தை மூன்று.

கேவலஞ் சிரென்று கேட்கச் சொலும்வாதர்
மாவல பைங்கலத்தை வாசியா—ராவ
மறித்துஞ் சகலநிலை மாமாயை மூடல்
தெறிக்கவரு மேசுத்தத் தேர்வு. (௱சச)

ஐந்தவத்தை ஐங்கோசம் பொருளல்ல.

அஞ்சவத்தை யைங்கோச மான்ம நிலையென்னல்
பிஞ்சவத்தை தேர்ந்தார் பிதற்றுரையே—நெஞ்சமுத்திப்
பார்க்கி லவைமலத்தாற் பண்ணப் படுநிலையே
சீக்கவர னுள்ளான் றெளி. (௱சரு)

ஒருமல மாதியவற்றி னுயிர்வருக்க மூவகைத்தாம்.

மும்மலத்தா ராகுமம் மூவர் முதலிகளோ
வெம்மலத்தை நீக்க வெறுவெளியே—விம்மிதத்திங்
காறத் துவாவை யறுத்த குருபாதந்
தேறத் தெளிவாஞ் சிவம். (௱சசு)

ஓரான்மாவிடத்து மலசத்தி கெடுதலே யதற்கு முத்தி.

ஒன்றேனு மாணவந்தா னென்றுப் பலசத்தி
நின்றே மறைக்கும் நெறிமைபா—லன்றேயந்துந்
தான்கெடா வண்ணந் தரிசிப்பாய் நன்மகனே
யேன்கெடா வண்ண மிருந்து. (௱சஎ)

கன்மம்.

தூலமாய்ச் சூக்கமாய்ச் சுத்தமார் காரணமாய்
நாலுமே மூவர்க்கும் நண்ணுவித்து—மேலை
மனமாதி மூன்றானு மன்னிய தெய்வ
வினமாதி யேவினைய தெண். (௱சஅ)

ஏனைய மலங்களின் சொரூபம்.

மாயா மலமிரண்டா மாண்டது மாயையந்
தூயாள் திரோதை சொரூபமே—யாயா
யிவற்றுண்மை மெய்ப்புலனு மேயுமிவள் செய்கை
யிவற்றுண்மை யாலே யியைந்து. (௱௪௯)

கன்மத்திரய நாசம்.

ஞான வனன்முன் னசிக்குமா காமியம்
மோனமுறச் சஞ்சிதமு முன்னில்லா—தேனைத்
தொடக்கவினை யைந்தெழுத்தாற் சோரு முடலூழ்
கடக்கவினை கண்டார் கருத்து. (௱௫௰)

மாயை திரோதைகளின் மறைப்பு.

முத்திறத்த சுற்றம் முழுச்சோ தனைத்தீர்வா
யத்தனரு ளாகுமே யம்மறைப்பு—சுத்தம்
படித்தார்க் கிவையிலவே பண்டெங் குரவ
னடித்தா னடமே நடம். (௱௫௧)

௫. பரமுத்தி.

முத்தி நிச்சயம்.

பாசத்தின் வீடும் பகர்சிவத்துப் பேறதுவுந்
தேசத்த முத்தித் திறனாகும்—நேசத்துச்
சித்தி நிலையிதுவே சேருஞ் சிவாநுபவ
மொத்தபர முத்தி யொழுங்கு. (௱௫௨)

மும்முதலுங் கெடாமைக்கு அநுபவங் காட்டல்.

பாசம் நிரதிசயம் பாரித்த வான்மாவந்
நேசச் சதசத்தாய் நின்றதாற்—றூசற்ற
வச்சிவத்தி னோடுசத்தா யத்துவித மாதலே
துச்சமிலாத் தூய தொடர்பு. (௱௫௩)

சின்முத்திரையின் அருத்தம்.

சும்மா விருந்தார் சுகரூப சித்தியுற்று
ரம்மா பெரிதிவ் வநுபவங்கா—ணிம்மா
நிலத்திவரே சச்சிதா னந்தநிலை நிற்பார்
மலத்தொடு மேவுதல் மாண்டு. (௱௫௪)

தத்துவமசி சிவத்துவமசி பொருள்.

ஒன்றோ விரண்டோ வொருபொருளோ வைக்கியமோ
வன்றே சமதையது வானதோ—நின்றேது
மாவாக் கியத்தின் மகிமை யிதுவறிமின்
றேவாக் கியநிலையைத் தேர்ந்து. (௱ருரு)

சோகம் பாவனையின் கருத்து.

சோகம்பா விக்கமறை சொல்லியதே யாங்கதனு
லேகம் பொருளென் றிசையற்க—வேகவிட
மக்கருடன் முன்ன ரலந்ததே மெய்க்கருடன்
வேறே யுரைப்பானும் வேறு. (௱ருசு)

பிரபலசுருதிக்கும் மெய்ப்பொருள் கோடல்வேண்டும்.

வேதத்து மாகமத்து மெய்ப்பொருளைக் காட்டுமிடம்
நாத னுரைத்தசிவ ஞானமே—போதத்து
நன்மை கடைப்பிடித்தார் ஞானமுத்தர் கொள்வோமே
தின்மை கடைப்பிடித்தார் தீர்வு. (௱ருஎ)

திருவருளே ஆசான் அநுபவம்.

அருளே யடியாம் அருளே முடியாம்
அருளே சிவானுபவ மாகும்—அருளே
குரவன் பரமுத்தி கூட்டு முபாயந்
திரவனுரை யீதே தெளி. (௱ருஅ)

பிரபோதம் முத்தி முடிவன்று.

சற்கா ரியவாதி சாற்றுந் தனிமுத்தி
நற்கா ரியம்பத்தி னண்ணுமே—புற்கார்
பிரபோத முத்தியெனிற் பேச்சறுமோ சொல்லீர்
பிரபோத நற்போதப் பேர். (௱ருகூ)

முத்தி சிவசமத்துவ மன்று.

தற்போத மாய்ந்தவிடந் தாரகமா மத்தன்றாள்
நற்போதஞ் சொன்னநல ஞானசித்தி—யிற்போதஞ்
சார்ந்தார் சமத்துமுத்தி சாதிப்பார் தற்காணு
றோர்ந்தாரோ வுத்தமனை யுள். (௱சுO)

இவன் இச்சை ஞானங் கிரியை யியலுமிடம்.

சச்சிதா னந்தத் தனிப்பிழம்பாஞ் சங்கரன்பா
லிச்சை யிசைவாதி யேயவே—யுச்சிதமாய்த்
தாடலைபோல் நிற்றல் சகசநிட்டை யென்பர்சிவத்
தாடலையே கொண்ட வவர். (௱சுக)

சு. சார்பு மவாவு மற்று நிற்றல்.

சிவஞானமே சாயுச்சியாதீதம், இவ்வாகமஞானத்தை விளக்கற்கு எழுந்தன பித்ருயானம் தேவயானம் முதலியவை.

தூமாதி மார்க்கநற் சுத்தபஞ் சாக்கினியக்
காமாதி நீக்கக் கருதார்ச்சி—ராமார்க்கம்
மீளாக் கதியாகு மெய்ச்சிவத்தி னல்லருட்கே
யாளாக்கக் காட்டு மவை. (௱சுஉ)

உபாயமார்க்கம் வைநயிகர்க்கே கூறப்பட்டது.

சாங்குசித்த ரென்றுஞ் சரித்தசிவங் துய்ப்பாரே
யோங்குலகோ ரென்று முயராரே—பாங்கியலும்
வைநயிகர்க் கென்றே வகுத்த மறையொழுக்கங்
கையினெல்லி யென்னவே காண். (௱சுந)

வானப்பிரத்தர்வரை மூவர் உண்மையியல்.

மூன்று பிறப்பு முறையே யொழித்தாரே
சான்ற துறவினர்சற் சங்கத்துக்—கான்ற
வனமொத்த மண்பொன் னணங்காசை நீத்துக்
கனமொத்தார் மெய்த்தவராங் காண். (௱சுச)

மெய்த்துறவினர்பால் ஈசன் கலந்து நிற்பன்.

பட்டப் பகல்விளக்காப் பாவிப்பார் தம்முளத்தே
யெட்டப் பரமூர்த்தி யெம்பெருமான்—கிட்டிச்
செழுந்தேனைக் கற்கண்டைச் செங்கனியை யொப்பா
னிழிந்தோரை யீடேற்று வான். (௱சுரு)

பூதப்பழிப்புமுதல் உலகழிப்புக் கண்டாரே அறிவினர்.

நாத பரியந்தம் நாமலவென் றுட்கண்டு
மோது மணிமாதி முன்னொழித்துப்—பூதப்
பழிப்பாதி முப்பதும் பார்த்தாரே கட்டை
யொழிப்பா ரெனவுரைக்கு மோத்து. (௱சுசு)

கருமம் சிறந்ததன்று சிவதருமமே சான்றது.

கருமம் விரதங் கருதுந் தருமஞ்
சிரமங் கெடுக்குஞ் செபம்யோ—குரமாஞ்
சிவஞான சித்தித் திறமாமோ போத
மவஞானத் தார்க்காகு மா. (௬௬எ)

சொரூப சந்தானத்தின் மெய்க்கருத்து.

தருமான் ஞானத்திற் றன்மெய லற்றுற
பிரம மெனவாவன் பேணித்—தரமார்
சுகர்வாம தேவர் சொலும்புள் ளெறும்பு
தகவானோர் மெய்த்தவர் தாம். (௬௬அ)

பிராரத்த க்ஷயமே விதேகமுத்தி.

எடுத்த வினைகெடுத்தா லேன்ற வுடலங்
தொடுத்த கணத்தே துறக்கு—மடுத்தடுத்துப்
பேசுவதென் மைந்தா பெரியபரி பூரணத்திற்
கூசிடா தேகுறியைக் கொள். (௬௬௯)

ஏகபாவனை எவர்க்குளது.

பாவனா தீதம் பதியா விடிலேக
பாவனை நன்றும் பருணிதர்க்குச்—சோகந்
துரியாதீ தத்தே சுகரூப மாத
லரியாதி யர்க்கு மரிது. (௬எ0)

எ. மெய்யுணர்தல்.

நைட்டிக பிரமசரியம்.

பிரம சரியம் பெரியமறை கூறிற்
பிரமசரி யத்தே பெரிதுந்—துரிசற்றுச்
சைவத் துறவிற் சரித்தாரே மெய்த்தவ
ருய்வைக் கருத்தா லுவந்து. (௬எக)

மிருதித் துறவினும் மெய்த்துறவு இன்னது.

சாதித் துறவுஞ் சமயத்து மெய்த்துறவு
மோதிற் றுறவல்ல வோங்கார—நாதத்
துரிய துறவே சுகர்துறவு சைவக்
குரிய துறவுத் தமம். (௬எ௨)

மந்தவிரார்கள் துறவு.

சங்கடத்தால் விட்டோர் சகத்தாரே சாதுக்க
ளிங்கிதத்தால் மெய்த்துறவை யேற்றார்கள்—பங்கமிலர்
மெய்ச்சிவத்தை மேவி விழுப்பொருளைத் துய்ப்பது
கைத்தவ மல்ல கணக்கு. (௩௭௩)

சத்துக்களின் காவற்பொருட்டன திருமடங்கள்.

இடம்பொருளேவலுக் கென்கடவே மென்று
தடங்கத் துறந்தா ரறிஞர்—மடம்புக்கு
மெய்த்தவமே நின்றார் விமலஞா னம்பெற்றார்
உச்சிதரே காணு முவர். (௩௭௪)

முனிவரோடு கூடி வசித்தல் சிறப்பு.

எச்செயலைச் செய்தாலு மெங்கோன் றவரோடு
மெச்சுதவ மேன்மை விரும்பினேம்—நச்சொழிக்கும்
பஞ்சாக் கரநடனம் பார்த்து மகிழ்கின்றேம்
துஞ்சாப் புலத்துச் சுகம். (௩௭௫)

ஒத்த விடத்து நித்திரை கொள்.

ஒத்த விடத்தே யுறங்குவது முண்பதுவுங்
கற்பதுவும் நிற்பதுவுங் காருணியம்—புற்புதத்த
விவ்வுலகை நோக்கோ மெழிலார் சிவஞானந்
துவ்வுலக தாமே துறவு. (௩௭௬)

உள்ளத்துறவின் மேம்பாடு.

உட்டுறவு கொண்டோ முடையா னிடம்சேர்ந்தோ
முட்டுளைவு சற்று முடையோமோ—கட்டளை
கோடித் திரியோம் குரவனருளேயச்சா
நாடித் திரிகின்றோம் நாம். (௩௭௭)

தேசாடனமும் லோகசங்கிரகமும்.

சித்தஞ் சிவமானுற் றேசமெங்குஞ் செல்லலா
மொத்த சிவத்தே யுவக்கலா—மெத்த
துறவிக்கு மாசு துடைத்தல் கடனே
யுறவிற்கு முண்டோ வுவப்பு. (௩௭௮)

முனிவரர் சரமூர்த்திகள் என்றபடி.

ஏடணைகள் விட்டா ரியைந்த வுணவுற்றார்
கோடணையா மைந்துங் குறைந்தறக்—கோடணையிற்
பாதகத்தைச் சாரும் படிற்றொழுக்கம் விண்டாரே
நீதகத்தைச் செற்றார் சிவர். (ளஎகூ)

மெய்த்துறவோர் ஞானவேந்தர்.

நாவுக் கரையர் நல்ல துறவினராம்
மோவிழும்மை யாலாண்ட மூர்த்தியர்போ—லோவில்
சிவசா தனத்தாலே செய்வா ரரசு
தவராச யோகியராய்த் தாம். (ளஅ0)

பஞ்சாக்கரப்பொருள் ஆவார் ஞானவேந்தர்.

மெய்த்துறவைக் கொள்ளா விடின்மூலந் தீராதே
யத்துறவு விஞ்ஞான மாக்குமே—நற்றுறவு
பஞ்சாக் கரப்பொருளைப் பாலிக்கும் பாலிக்கும்
பஞ்சாக் கரமயமே பார். (ளஅக)

பஞ்சாக்கர சித்தி.

சாத்திரங்க ளோதிச் சகல கலையுணர்ந்தும்
நேத்திரம் போற்சிவனை நேர்காணார்—பா
பஞ்சாக் கரசித்தி பாலிக்கும் பாலிக்கும்
அஞ்சாக் கரநிலையைத் தூய்து. (ளஅஉ)

[stamp]

சூத்திரசம்பிரதாயம் இத்துணையும்.

௩: குருபீட சம்பிரதாயம்.

க—தருமபுரவாதீனம்.

சிவசாதனம்.

உண்மாசு தீர்க்கு முபநிடத வெண்பூதி
கண்மாசு தீர்க்குங் கடவுள்மணி—யெண்காவி
நற்றவத்து வேந்தாய் நயந்தவர சாட்சிநல்கும்
நற்றவமு மீதே நயம். (௱௮௩)

அவிச்சின்ன மரபு இன்னதெனல்.

கபடஞா னத்தாற் கருதார் சிவத்தைக்
கபடஞா னத்தைக் களைந்து—கபடமிலா
ஆனந்தா தீதத் தழுத்துஞ் சிவஞானி
தானந்த ஞானி தவன். (௱௮௪)

குருலிங்க சங்கமம் போற்றல்.

தருமைச் சிவஞானஞ் சார்ந்தார் தவராங்
குருலிங்க சங்கமக் கொற்றத்—தருவே
சரணம் புகுந்தாரைத் தம்மயமே யாக்கும்
அரணம் அவரே அரண். (௱௮௫)

௨—வாழ்த்து.

ஆசிலா வாகமத் தான்ற நிலைவாழ்க
தேசின் தருமைச் சிவஞான—தேசிகனு
மாதவத்து மெய்ஞ்ஞான வாழ்வார் முனிவரரு
மாதவத்து வாழ்க மகிழ்ந்து. (௱௮௬)

குருபீட சம்பிரதாயம் இத்துணையும்.

சம்பிரதாயதீபம் முற்றும்.

திருச்சிற்றம்பலம்.

சிவஞானதேசிகர் திருவடி வாழ்க.

பிழைதிருத்தம்.

பக்கம்.	செய்யுள்.	வரி.	பிழை.	திருத்தம்.
௨௩	15	௨	ணிபாதம்	நிபாதம்
,,	21	௧	யாதமாந்	பாதமாந்
௨௭	48	௩	நிததிய	நித்திய
,,	,,	௪	காயுதன்	காயதன்
௩௨		௧௩	பட்டுன	பட்டுள
,,		௧௫	எளவும்	எனவும்
௪௩	௧௪௰	௨	தவத்து	தலத்து

பிரபவஞு ஆவணிமீ" த்தில் பிரசுரித்த திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவலில், அச்சிடுவித்த பின்னாக் கிடைத்த ஏட்டுச் சுவடிகளிற் கண்ட பிரதிபேதங்கள் :—

பக்கம்.	வரி.	பாடம்.	பேதம்.
௬	௪	ருகியொரு	ருகிலொரு
,,	௧௪	பண்ணிய	பனனிய
,,	௨௧	முயிரினை	முயிரனைத்து
௭	௧	சடமா	செட மா
,,	௭	ஆசறு	ஆசுறு
,,	௮	நிறகை	நிறக
,,	௧௫	உயரா	உவரா
௮	௪	தாகி யிதமு	தாகியு மிதமு
௯	௩	வவாவுள்	விரிவுள்
,,	௪	விடயதறி	விடைவற்றி
,,	௧௫	மாதகன்	மாதல்
,,	,,	ணிசசயம்	நிசசயம்
௰	௫	புணாவிலாபம்	விலாபம்
,,	௧௬	தெரிதத	தெரிநத
௧௧	,,	ரூப	சொரூப
,,	௨௰	யானங்	லானங்
௰௨	௬	வெழிலுற	மெழிலற
,,	௧௧	மறைநததிது	மறைநதது மிது

௰௨-பக்கம் ௪ வரிக்குப் பிரதியாக :

ஏதமில் சொரூப மிசசை ஞான
மேதகு கிரியை மிக்குடைத் தாயும்
விகற்பமில் லாமல் வீவற நிற்றல்
இகலறு ... ...